**தலைப்பு 126 – கல்வி அமைச்சு**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 126 - கல்வி அமைச்சின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கல்வி அமைச்சின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூன் 25 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கல்வி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**(அ)** நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

**(ஆ)** முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| முன்னைய ஆண்டிற்குரிய அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு | அமுல்படுத்தப்படாதிருந்த பரிந்துரைகள் | இந்த அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|
| 1.6.1(அ)(i) | ஒன்றிணைந்த கணக்கு இணக்கக் கூற்றில் கட்டுப்பாட்டு கணக்கின் மீதி மற்றும் கட்டுபாட்டு கணக்கிற்கும் தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பிற்கும் இடையே இணக்கம் செய்யாமை | 1.6.1 (அ) (i) |
| 1.6.1(அ)(ii) | திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் மீதி ஒன்றிணைந்த கணக்கு இணக்கக் கூற்றின் கட்டுப்பாட்டுக் கணக்கின் தனிப்பட்ட மீதிக்கு இடையே இணக்கம் செய்யாமை | 1.6.1 (அ) (ii) |
| 1.6.1 (ஆ)(i) | நிதியல்லா சொத்துக்களில் முன்னைய ஆண்டின் இறுதி மீதி மீளயாய்வாண்டின் ஆரம்ப மீதியுடன் இணக்கம் செய்யாமை | 1.6.1 (ஆ)(i) |
| 1.6.1 (ஆ)(ii) | நிதியல்லா சொத்துக்கள் கைப்பற்றல்களின் செலவினம் சரியாக நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்படாமை | 1.6.1 (ஆ)(ii) |
| 1.6.1 (இ)(ii) | மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை. | 1.6.1 (இ)(iii) |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ஒன்றிணைந்த கணக்கு இணக்க கூற்றில் சீராக்கப்பட்ட கட்டுப்பாட்டு கணக்கு மீதி ரூபா | கடன் மீதிகளின் காணப்படும் வேறுபாட்டை சீராக்குவதற்காக | ஒன்றிணைந்த கணக்கு இணக்க கூற்றிலும் கட்டுப்பாட்டு கணக்கு மீதி மற்றும் தனியாள் |

| | | | |
|---|---|---|---|
| | 2,819,896,075 ஆக இருந்த போதும் தனியான மீதிகளின் வகைப்படுத்தல் பொழிப்பின் பிரகாரம் அம்மீதி ரூபா 2,815,211,719 ஆக இருந்ததால் கட்டுப்பாட்டு கணக்கு மற்றும் தனியாள் கணக்குபொழிப்பிற்கு இடையே ரூபா 4,684,356 ஆன வேறுபாடு காணப்பட்டது | நடவடிக்கை எடுத்து வருவதாக | மீதிகள் வகைப்படுத்தல் பொழிப்பின் மீதிக்கு இடையே வேறுபாடு களை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ii) | திறைசேரி பதிவேடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் தீர்வு செய்யாத கடன் மீதி ரூபா 2,880,435,658 ஆக இருந்த போதும் சீர் செய்யப்பட்ட கட்டுப்பாட்டு கணக்கில் அம்மீதி ரூபா 2,819,896,075 ஆக இருந்ததால் திறைசேரி பதிவேடுகள் மற்றும் சீராக்கப்பட்ட கட்டுப்பாட்டு கணக்கின் மீதிகளுக்கு இடையே ரூபா 60,539,583 ஆன இணக்கமின்மை காணப்பட்டது. இது முன்னை ஆண்டில் காணப்பட்ட வேறுபாடு உடன் ஒப்பிடும் போது ரூபா 4,268,597 ஆன அதிகரிப்பொன்றாகும். | அனைத்து உத்தியோகத்தர்களின தும் தகவல்கள் மாதாந்தம் கொண்டு வரப்பட்டு அக்கடன் மீதிகள் பொழிப்பாக்கப்பட்டு சீராக்கம் செய்யப்பட்டு திருத்தங்களை இருந்தால் அவற்றை சீராக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கட்டுப்பாட்டு கணக்கின் மீதி மற்றும் திறைசேரி புத்தகங்களுக்கு இடையே மீதிகளுடன் இணக்கம் செய்யப்பட வேண்டும் |
| (iii) | அரச உத்தியோகத்தர்களின் கடன் மீதி திணைக்கள புத்தகத்தின் பிரகாரம் மற்றும் தனியாள் மீதி வகைப்படுத்தல் பொழிப்பிற்கு இடையே ரூபா 65,223,939 ஆன வேறுபாடு 1984 ஆம் ஆண்டு இடம்பெற்ற சிக்கலான நிலைமை காரணமாக ஆவணங்கள் அழிந்தமையால் 1990 ஆம் ஆண்டு கணக்கு இணக்க கூற்று சமர்ப்பிக்காமல் போன்ற விடயங்களின் அடிப்படையில் ஏற்பட்டதாகவும் முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டில் இப்பெறுமதி ரூபா 4,578,797 ஆல் அதிகரித்திருந்தது. மேலும் கடந்த ஆண்டின் இணக்க கூற்றில் வேறுபாடுகள் மீளாயவாண்டிலும் சீராக்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | அனைத்து உத்தியோகத்தர்களின தும் தகவல்கள் மாதாந்தம் கொண்டு வரப்பட்டு அக்கடன் மீதிகள் பொழிப்பாக்கப்பட்டு சீராக்கம் செய்யப்பட்டு திருத்தங்களை இருந்தால் அவற்றை சீராக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கடன் மீதிகளில் காணப்படும் வேறுபாடுகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**(ஆ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | திறைசேரி பதிவேடுகளின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி அல்லாத சொத்துக்கள் மீதி ரூபா 176,407,862,390 ஆக இருந்ததுடன் 2023 ஜனவரி 01 இல் உள்ளவாறு திறைசேரி பதிவேடுகளின் பிரகாரம் அம்மீதி ரூபா 173,918,252,522 ஆக இருந்ததால் ரூபா 2,489,609,868 ஆன வேறுபாடு காணப்பட்டது. | சிகாஸ் மென்பொருள் உள்ளடக்கப்பட்டு வேறுபாடுகள் இனங்காணப்பட்டு அவற்றை தீர்வு செய்வதற்கு தேவையான தகவல்கள் அரச கணக்குகள் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக | இறுதி மற்றும் ஆரம்ப மீதிகள் சமமாகும் வகையில் சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ii) | 2023 ஆம் ஆண்டில் மூலதன சொத்துக்கள் கையேற்றல் பெறுமதி ரூபா 7,845,829,505 ஆக இருந்ததுடன்,நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்ட 2101 முதல் 2104 வரை மற்றும் 2106 ஆகிய செலவின விடயங்களின் கீழ் மூலதன சொத்துக்கள் கையேற்றலுக்காக செலவிடப்பட்ட செலவினம் ரூபா 20,502,458,615 ஆக இருந்ததால் ரூபா 12,656,629,109 ஆன வேறுபாடு ஒன்று காணப்பட்டதுடன் அதன் பிரகாரம் மூலதனமாக்கப்படாத சொத்துக்களின் பெருமதி ரூபா 12,656,629,109 ஆக இருந்தது ஆரம்ப மீதிகள் வேறுபட்டவை மற்றும் மூலதனமாக்கப்படாத சொத்துக்கள் காரணமாக SA 82 அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட இறுதி தேறிய சொத்துக்கள் மீதி மற்றும் நிதி நிலைமை கூற்றில் உள்ளடக்கப்பட்ட தேதிய சொத்துக்கள் மீதி மூலம் கல்வி அமைச்சுக்கு சொந்தமான உள்ளவாறான சொத்துக்கள் அளவு நிருபணமாக இருக்கவில்லை | எதிர்காலத்தில் ஒவ்வொரு மாத இறுதியிலும் அத்தகவல்களை இணக்கம் செய்து பார்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அது தொடர்பாக உரிய நிறுவனங்களுக்கு அறிவூட்டி ஆலோசனைகள் வழங்குவதாகவும் | மீனாய்வாண்டின் போது கையேற்கப்பட்ட மூலதன சொத்துக்கள் ஆண்டில் மூலதனம் ஆக்கப்பட வேண்டும் |
| (iii) | மீளாய்வாண்டின் இறுதியில் இனங்காணப்பட்ட கட்டிடங்கள் மற்றும் காணிகளின் மதிப்பீட்டு பெறுமதி ரூபா 2,778,078,008 ஆக இருந்ததுடன் அப்பெறுமதி நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை | செயற்திட்ட பிரிவினால் கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் கணக்கிடப்படாத சொத்துக்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கள் அவ்வாண்டிலேயே கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

**(இ) கணக்காய்வு சான்றுகள் இன்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்ட 17 கணக்காய்வு விசாரணைகளுக்கு 2024 மே 31 ஆம் திகதி வரையில் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் பின்னர் வழங்குவதாக | நிதிப் பிரமாணம் 155 மற்றும் நிதிப் பிரமாணம் 452(1) இன் பிரகாரம் பிரதான கணக்கு உத்தியோகத்தரினால் கணக்காய்வு விசாரணைகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை சீராக்குவதற்கும் விசாரணைகளுக்கு உடனடியாக பதிலை வழங்கவும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த ரூபா 10,890,720 பெறுமதியான போக்குவரத்து உபகரணங்கள் மற்றும் ஏனைய இயந்திர உபகரணங்களுக்குரிய மதிப்பீட்டு அறிக்கை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு மாத இறுதியிலும் அறிக்கை கொண்டுவரப்பட்டு சீராக்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக | மதிப்பீட்டு அறிக்கையை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | முற்பண பி கணக்கிற்குரிய கிழக்கு மாகாணத்தின் 1990 காலப்பகுதியில் மாகாண சபைகள் கடன் மீதிகள் தீர்வு செய்வதற்குரிய சேர்க்கப்பட்டுள்ள ரூபா 22,424,325 மற்றும் திறைசேரி 7004 கணக்கு ஊடாக மாகாண சபை கடன் மீதிகளைத் தீர்வு செய்தலாக கழிக்கப்பட்டுள்ள ரூபா 48,909,855 பணத்துக்குரிய அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 1980 ஆம் ஆண்டு முதல் திறைசேரி அச்சீட்டு குறிப்புகளைக் கொண்டு வருவதற்கு பொது திறைசேரியால் வேண்டு கோள் விடுக்கப்பட்டுள்ள துடன் கிழக்கு மாகாண கல்வி திணைக்காட்டிற்கும் உரிய தகவல்கள் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக | மீதி உறுதிப்படுத்தல் களுக்கு தேவையான எழுத்து மூன்று எழுத்து மூல சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 14 மூலதன செலவின விடயங்களின் மொத்தம் ரூபா 228,723,738 மற்றும் 05 மீண்டும் செலவின விடயங்கள் மொத்தம் ரூபா 390,125,490 ஆன தேதிய நிதி ஏற்பாட்டில் 50 சதவீதத்திற்கு மேற்பட்டவை சேமிப்பாக காணப்பட்டன. | இதற்காக தெளிவுபடுத்தல் வழங்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக | தேவைப்பாடு சரியாக இனங்காணப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 8 மூலதன செலவின விடயங்களில் மொத்தம் ரூபா 81,000,000 ஆன மொத்த நிதி தேதிய நிதி ஏற்பாடு ஆண்டு இறுதியில் சேமிக்கப்பட்டு இருந்தது. | எதிர்பார்த்த பிரகாரம் செலவினங்களை மேற்கொள்வதற்கு நேராமை காரணமாக நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டுள்ளதாக | தேவைப்பாடு சரியாக இனங்காணப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | பாடசாலை சுகாதார போஷாக்கு நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்து வதற்குரிய தேவையான நிதி ஏற்பாடு முழுமையாக மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டி ருக்கையில் செலவின விடய இலக்கம் 126-01-02-001-1501 இன் கீழ் பாடசாலை சுகாதார போஷாக்கு நிகழ்ச்சி திட்டத்திற்காக ரூபா 2,500,000,000 ஆன நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆண்டின் இறுதி வரையில் அவற்றில் 94 சதவீதம் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டு இருந்தது. | பாடசாலை உணவு நிகழ்ச்சி திட்டத்தை செயற்படுத்தும் போது மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட பணம் உரிய மாகாண சபையின் பாடசாலை உணவு நிகழ்ச்சி திட்டத்தை செயற்படுத்தும் அனைத்து தேசிய மற்றும் மாகாண சபைகள் பாடசாலைகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளதால் தேசிய பாடசாலைகளுக்கு பணம் ஒதுக்குவது தேவைப்படவில்லையென | தேவைப்பாடு சரியாக இனங்காணப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருக்கையில் நி.பி 66 மாற்றங்களின் கீழ் நிதி ஏற்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டு 100 சதவீதமும் சேமிக்கப்பட்டிருந்த 02 செலவினை விடயங்கள் காணப்பட்டன மேலும் 07 செலவின விடயங்களுக்காக நி.பி.66 மூலம் ரூபா 241,300,000 ஆன நிதி ஏற்பாடுகள் மாற்றப்பட்டுள்ளதுடன் அந்நிதி ஏற்பாடுகளில் ரூபா 230,928,516 ஆன நிதி ஏற்பாடு அதாவது 96 சதவீதம் சேமிக்கப்பட்டு இருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகள் ஏற்படாத வகையில் உத்தியோகத்தர் களுக்கு அறிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | உரிய தேவைப்பாட்டு கருத்தில் கொள்ளப்பட்டு தேவையான செலவின விடயங்களுக்காக மாத்திரம் மதிப்பீடு தயாரிப்பதற்கும் நிதி ஏற்பாடுகளை மாற்றுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 17 செலவின விடயங்களுக்குரிய நிதி ஏற்பாட்டை மிகைத்து ரூபா 66,412,710 ஆன பொறுப்புக்களுக்கு கடப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது | பதிலை பின்னர் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிதி ஏற்பாடுகளின் சேமிப்பை மிகைத்து பொறுப்புக்கள் ஏற்படுத்தக் கூடாது |
| (ஆ) உயர்கல்வி துறைக்குரிய ரூபா 696,103,548 மற்றும் திறன்கள் துறைக்குரிய ரூபா 46,596,226 ஆன பொறுப்புக்கள் நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை | இந்நிலைமை எதிர்காலத்தில் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுப்பதாக | ஆண்டிற்குரிய அனைத்து பொறுப்புகளையும் நிதிக் கூற்றுகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 2.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையான பிரகாரம் குறித்துரைத்த கால எல்லையில் சகல கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதிலளிக்கும் வகையில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், அறிக்கையின் 3.16 பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதலளிக்கப்பட்டிருக்க வில்லை. | அனைத்து கணக்காய்வு விசாரணைகளுக்கு விரைவாக பதிலளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் வெற்றித் தன்மை தொடர்பாக அவ்வப்போது மீளாய்வினைச் மேற்கொண்டு அதன் பிரகாரம் முறைமையை ஆக்கபூர்வமாக ஆக்குவதற்கு தேவையான | பதிலை பின்னர் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

மாற்றங்களை செய்ய வேண்டியிருந்தமையும், அந்த மீளாய்வை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப் பட்டமைக்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| அவதானிப்புக்கள் | | | | | |
|---|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி ரூபா | இணங்காமைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் 104(3)(4) ஆம் பிரிவுகள். | | 08 சந்தர்ப்பங்களில் இடம்பெற்றிருந்த வாகன விபத்துக்கள், காணாமல் போனமை பற்றாக்குறை மற்றும் தீப்பிடித்தமை போன்ற நட்டங்கள் தொடர்பாக ஆரம்ப மற்றும் இறுதி அறிக்கைகளை வழங்கி பரிசோதனைகளை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட வில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பொது நிர்வாக அமைப்பு சுற்றறிக்கை<br>2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றறிக்கை | | அரச நிறுவனங்களில் உத்தியோகத்தர்கள் கைவிரல் அடையாள இயந்திரத்தை பயன்படுத்தி வருகை மற்றும் வெளியேறல் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் வருகை மற்றும் வெளியேறுவதற்காக பதிவேடு என்று பராமரிக்கப்பட்டால் கைவிரல் அடையாள இயந்திர பாவனைக்கு முறைமைக்கு மேலதிகமாக வைக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதும் வருகை மற்றும் வெளியேறல் கைவிரல் அடையாள இயந்திர பயன்பாட்டின் மூலம் உறுதிப்படுத்துவதற்கு 02 பாடசாலைகள் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | பதிலளிக்கப்பட வில்லை. | குறித்த சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) | நிதி அமைச்சு சுற்றறிக்கை<br><br>2017 திசெம்பர் 21ஆம் திகதிய 02/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் ஆம் பிரிவு | | I மீளாய்வாண்டு இறுதியில் திறன் பிரிவின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதியில் 2020 ஆம் ஆண்டு முதல் வெளித்தரப்பினருக்கு பயன்பாட்டிற்காக வழங்கப்பட்ட ரூபா 13 மில்லியன் பெறுமதியான 04 வாகனங்களின் பெறுமதி உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அவ்வாகனங்களுக்கு உரிய நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்ட சொத்துக்களில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களை கையளிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக | உரிய சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| | | | II பொருளாதார அலுவலக அமைச்சுக்கு சொந்தமான ரூபா 4.3 மில்லியன் பெறுமதியான வாகனமொன்று 2020 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்பட்டு வந்த போதிலும் அவ் வாகனத்தை கல்வி அமைச்சுக்கு கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | அமைச்சு கலைக்கப்பட்டு இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளதால் வாகனத்தின் உரித்து தொடர்பாக விடயங்களை விசாரிக்கப்பட்டுள்ளதாக | உரிய சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஈ) | தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் 2017/4/27 ஆந் திகதிய EST-EXAMS-05-1007- 06 இலக்க கடிதம் தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம | 7,418,540 | கடமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் கூடியது 03 மணித்தியால்ங்களுக்கு உட்பட்டு மற்றும் ஓய்வூதிய உத்யோகத்தர்களுக்கு கூடியது 6 மணித்தியாலங்களுக்கு உட்பட்டு வளவாளர் படிகள் கொடுப்பனவு செய்வதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்த போதும் அந்த விடயத்துக்குரிய கடமைக்குரிய வெவ்வேறு கைநூல்கள் தயாரித்தல், வழிகாட்டல்கள் கோவை தயாரித்தல், சுற்றறிக்கை தயாரித்தல் ஆசிரியர் பயிற்சி மொடியுல்கள் போன்ற விரிவுரை தன்மை அல்லாத பணிகளுக்காக சமூகமளித்த உத்தியோகத்தர்களுக்காக | நேரடியாக பயிற்சி அளித்தல் நடைமுறை சாத்தியமற்றதால் இவ்வாறு தயாரிக்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்படுகின்றன விரிவுரை தன்மையால் நடத்துவதற்கு முடியாதிருந்தவுடன் அவற்றை செயலமர்வு தன்மையினால் நடத்தப்படுகின்றன சட்ட விதிகள் பிரமாணங்களின் பிரகாரம் மணவாளர் கொடுப்பவர்கள் மேற்கொள்ளப்பட் | தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வளவாளர் படிகளாக கடிதத்தின் ஆலோசனைகளுக்கு முரணாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | டுள்ளதாக | |
| (உ) | கல்வி அமைச்சின் சுற்றறிக்கை | | | |
| | 2023 ஏப்ரல் 25 ஆம் திகதிய 17/2023 ஆம் இலக்க கல்வி செயலாளரின் சுற்றறிக்கையின் (இ) பந்தி | தேசிய பாடசாலை ஒன்றாயின் கல்வி அமைச்சு கட்டமைப்பு குழுவின் போதும். மாகாண சபையின் பாடசாலை ஒன்றானால் மாகாண கட்டமைப்பு குழுவின் போதும் தீர்மானம் ஒன்று இல்லாமல் சமமான வகுப்பு எண்ணிக்கைகளை மாற்ற கூடாத போதிலும் கட்டமைப்பு குழு அங்கீகாரம் இன்றி இடைநிலை வகுப்புகளுக்காக புதிய வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. | இதுவரை சில பாடசாலைகளில் வகுப்பு அறைகளுக்கு இடவசதிகள் போதாமை, பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களே வேறுபடுத்தி கற்பித்தல், இரு மொழி வகுப்புகளை பிரித்து வோறாக கற்பித்தல் போன்ற காரணங்களின் பேரில் வகுப்பு அறைகள் எண்ணிக்கையை பௌதீக ரீதியாக அதிகரிக்கப்பட்டு ள்ளதாக | சுற்றறிக்கை ஏற்பாடு களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| | 2017 ஜூன் 21 ஆம் திகதிய 21/2017 ஆம் இலக்க சுற்றறிக்கை வழிகாட்டி கோவையின் 1.1 ஆம் வழிகாட்டி | பாடசாலைகளுக்காக வழங்கப்பட்டுள்ள இணையதள வசதிகளுக்குரிய எதிர் வைரஸ் மென்பொருள் காலரீதியாக நாளது வரையாக்கப்பட வேண்டிய போதிலும் எந்த ஒரு பாடசாலையிலும் அவ்வாறு நாளாவதுவரையாக்கல் மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளி ன் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு பாடசாலைகள் மற்றும் மாகாண சபைகள் வலய தகவல் தொழில் நுட்ப உத்தியோ கத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டத ாக. | சுற்றறிக்கை ஏற்பாடு களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| | 2012 நவம்பர் 30 ஆம் திகதிய 40/2012 ஆம் இலக்க சுற்றறிக்கை | விடயப் பரப்பு திருத்தங்களுக்கு இணங்க காலாவதியான உபகரணங்கள் இரசாயன திரவியங்கள் மற்றும் ஆவியாகும் பொருட்களின் பட்டியல் 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை திருத்தம் | விடயப்பரப்பு சுற்று 08 ஆண்டு களுக்கு செயற்படுத்தப்படு வதால் மற்றும் 2015 ஆம் ஆண்டில் இடம்பெற்ற | சுற்றறிக்கை ஏற்பாடு களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதும் 9 ஆண்டுகளை கடந்திருந்தும் பட்டியல் திருத்தத்திற்கு உட்பட்டிருக்கவில்லை. | விடய மறுசீரமைப்பு போன்ற விஞ்ஞான பாடத்திள் பரிந்துரை செய்முறை பரீட்சைகளில் அதிக அளவில் வேறுபாடு இடம் பெறவில்லை என்பதாக | |
| 2007 திசெம்பர் 13 ஆம் திகதிய 20/2007 ஆம் இலக்க சுற்றறிக்கை | மிகவும் வசதியான பாடசாலையாக வகைப்படுத்தப்பட்ட பாடசாலை ஒன்றில் ஆசிரியர் ஒருவரின் சேவை காலம் ஆகக் கூடியது 6 ஆண்டுகள் எனத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதும் பரீட்சிக்கப்பட்ட மிகவும் வசதியான பாடசாலைகளில் 04 முதல் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சேவைக்காலத்துடன் 113 ஆசிரியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | தேசிய பாடசாலைகளின் ஆசிரியர்கள் தொடர்பான வருடாந்த இடமாற்ற கொள்கையின் பிரகாரம் உரிய காலத்தை பூர்த்தி செய்த ஆசிரியர்கள் இட மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட வேண்டும். |
| 2016 மார்ச் 29 ஆம் திகதிய சுயதொழில் உருவாக்க ஆரம்ப உபகடன் (SEPI) முறைமையின் II ஆம் கட்ட உடன்படிக்கை | | | |
| 3.2 பந்தியின் பிரிவு (f) | கணக்காண்டு முடிவடைந்து மூன்று மாதங்களுக்குள் SEPI Loan Scheme – Phase 11 தொடர்பாக கணக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கும் பொறுப்பு மத்திய வங்கிக்கு இருக்க வேண்டிய போதிலும் 2016 மாதம் ஆண்டு முதல் இதுவரை அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை | ஒவ்வொரு ஆண்டிலும் பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி கணக்கறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படுவதாக | உரிய திகதிகளில் கணக்கறிக்கைகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | உடன்படிக்கையின் 2.2 ஆம் பந்தியின் பிரிவு | | கடன் தொகை வழங்குவதற்குரிய அனைத்து விண்ணப்பங்களும் திறன் அபிவிருத்தி பிரிவு ஊடாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிபுணத்துவ பிரிவின் ஈடுபாட்டுடன் இல்லாமல் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டிற்காக பதிவு செய்யப்பட்ட 123 நலனாளிகளிடமிருந்து 47 நலனாளிகளுக்காக ரூபா 35,100,000 கடன் தொகை வழங்கப்பட்டிருந்தது. | முயற்சியாளர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங் களை நடத்தி அந்நிகழ்ச்சி திட்டங்கள நடாத்தி முடி வடைந்ததாக உறுதிப்படுத்திய பின்னர் NVQ சான்றிதழ் பத்திரத்தை மாத்திரம் கருத்திற் கொண்டு கடன் வழங்கப்படுகின்ற து. அமைச்சினால் நேரடியாக விண்ணப் பங்களை அவதானிக்கும் செய்முறை நடைமுறைச் சர்தியம் இல்லை யென்பதாக | உரிய உடன்படிக்கை யில் குறிப்பிடப்பட்ட விடயங்களுக் கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஊ) | அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சேவை குறிப்பு கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 165 மற்றும் 166 ஆம் பிரிவுகள். | 8,063,39 3 | மாத்தறை ராகுல கல்லூரியில் ஆசிரியர் சேவையில் கடமை நிறைவேற்றும் ஆசிரியர் ஒருவர் அதிபரின் பரிந்துரை இல்லாமல் மற்றும் நியமன அதிகாரியின் அங்கீகாரம் ஒன்று 2006 மே 5 ஆம் திகதி முதல் முறையற்ற வகையில் வேறு சேவை யொன்றுக்கு தற்காலிகமாக விடுவிக்கப்பட்டிருந்த போதும் 2006 மே 5 முதல் 2023 ஜூலை 31 ஆம் திகதி வரை சம்பளங்கள் மற்றும் கொடுப்பவர்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன | பதிலளிக்கப்பட்டி ருக்கவில்லை | விடுவித்தல் முறையாக மேற்கொள்ளப் பட வேண்டியதுட ன் சம்பளம் மீளளிக்கப்பட வேண்டும் |

2.5 மோசடி தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 1961 இன் 08 ஆம் இலக்க உபகார பாடசாலைகள் மற்றும் பயிற்சி கல்லூரி குறை நிரப்பு ஏற்பாடு சட்டத்தின் பிரகாரம் கல்வி அமைச்சுக்கு சொந்தமான அரசிற்கு கையேற்கப்பட்ட பாடசாலைகளின் ஆதனங்கள் ஏனைய நபர்களுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு மேல் மாகாண சபைக்கு சட்ட ரீதியான இயலுமை இல்லாத இருக்கையில் மேல் மாகாண சபை அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 40 பேர்ச் அளவிலான கொ/ பின்வத்த பாடசாலை காணி மற்றும் கட்டிடங்கள் 2008 நவம்பர் 01 ஆம் திகதி முதல் 2 ஆண்டுகளுக்கு புராண பொம்மலாட்ட கலை நிறுவனம் ஒன்று நடத்திச் செல்வதற்கு நபர் ஒருவருக்கு குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுத்திருந்ததுடன் குத்தகை காலம் முடிவடைந்த போதும் ஆதனங்களை மீறப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் பாடசாலை ஒன்றை மூடுவதற்காக பாடசாலை கட்டமைப்பு குழுவின் அங்கீகாரம் ஒன்றை பெற்றுக் கொள்ளப்பட்டும் இருக்கவில்லை. இதன் காரணமாக மேலே பெறுமதியான விலை மதிக்க முடியாத அரச காணி ஒன்றை வெளித்தரப்பரினருக்கு அனுமதி இன்றி உடமை கொள்வதற்கு இடம் அளிக்கப்பட்டிருந்தது | தெஹிவள பிரதேச செயலாளர் கல்கிஸ்ஸ நீதிவான் நீதிமன்றத்தின் தொடுக்கப்பட்ட வழக்கில் வழக்கு தொடுனரை காணியிலிருந்து அகற்றிக் கொள்ளுமாறு நீதிமன்ற கட்டளை ஒன்று வழங்கப்பட்டுள்ளதாக நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து ஆவணங்களை கையேற்று இவ்வாறான நிலைமைகள் | எதிர்காலத்தில் இடம்பெறாமல் இருப்பதற்கு தேவையான ஏற்பாடுகளை சுற்றறிக்கை மூலம் உரிய தரப்பினருக்கு அறிவித்தல் வேண்டும். |
| (ஆ) மாத்தறை ராகுல வித்யாலயத்தின் காணியில் 3.7955 பேர்ச் அளவில் மாத்தறை கொடகம அதிவேக நுழைவு வீதிக்காக காணி கையேக்கும் போது இழப்பீடு மற்றும் வட்டியாக கிடைத்த ரூபா 4,935,613 தொகை அபே குணசேகர டிரஸ்ட் பெயரிலான வங்கி கணக்கில் செலவு வைக்கப்பட்டு கணக்காய்வு திகதி வரையில் விளைவற்று காணப்பட்டது. | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை | பொறுப்பினை செயற்படுத்தப்படும் நிலைமைக்கு உட்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பாடசாலையின் தற்போதைய மற்றும் எதிர்கால மாணவர்களின் நலன்களுக்காக அப்பணத்தை ஈடுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மாத்தறை ராகுல வித்யாலயத்தில் வாகன தொகுதியை அமைக்கும் செயற்திட்டம் தொடர்பாக அதிபர் மற்றும் பழைய மாணவ சங்கத்தின் பொருளாளருக்கு இடையே ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் மாத்தறை மாவட்டத்தின் பொறியியலாளரின் (கட்டிடங்கள்) அங்கீகரிக்கப்பட்ட திட்டம் மற்றும் மதிப்பீட்டின் பிரகாரம் செயற்திட்டத்தை பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக 12 வேலை உருப்படிகள் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட விலையை மிகைத்து மேற்கொள்ளப்பட்டமையால் மொத்தம் ரூபா 1,754,911 கூடுதலாக ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை | கூடுதலாக செலுத்தப்பட்ட பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஈ) | மாத்தறை ராகுல வித்யாலயத்தின் வாகனம் தொகுதியை அமைத்தல் மற்றும் நில அலங்கார செயற்திட்டத்திற்காக பரப்பப்பட்டஇடைத்தொடர்பு அச்சுக்கள் அரசின் நிர்மாணங்களின் போது பயன்படுத்தப்பட வேண்டிய நியம அளவில் அச்சுக்கள் அல்லாததால் அவற்றின் அழுத்த சக்தியை அளவிடுவதற்கு கணக்காய்வின் போது முடியாமல் இருந்தது. அதன் பிரகாரம் அரசின் ஆய்வு கூடங்களில் பரிசோதனைக்காக பயன்படுத்த முடியாத அளவில் அறுகோண அச்சுக்கள் பரப்பி மதிப்பீட்டில் காண்பிக்கப்பட்ட அழுத்த சக்தி தொடர்பாக ஆய்வுகூட தரப்பரிசோதனை அறிக்கை இல்லாமல் அவ்வேலை விடயத்திற்காக ரூபா 2,195,817 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை | கூடுதலாக செலுத்தப்பட்ட பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**2.6 வைப்பு மீதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்படாத 04 வைப்புக் கணக்குகளில் 5 ஆண்டுகளை மிகைத்த மொத்தம் ரூபா 85,770,479 ஆன மீதிகள் தொடர்பாக நிதி பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. பதில் பின்னர் வழங்குவதாக | பதில் பின்னர் சமர்ப்பிப்பதாக | 02 ஆண்டுகளை மிகைத்த வைப்பு மீதிகள் தொடர்பாக நிதி பிரமாணம் 571 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 தூரநோக்கு மற்றும் செயற்பணி

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கல்வி அமைச்சின் பணிப்பொறுப்பின் பிரகாரம் உலக போட்டி நிலைமைக்கு ஈடுகொடுக்கும் வகையில் நம்பிக்கையாகவும் வெற்றிகரமாகவும் செயற்படுத்தல் தொடர்பான நம்பிக்கையுடன் உள்நுழைவதற்குரிய இயலுமை காணப்படுகின்ற வகையில் தேசிய கல்வி திட்டத்தை வடிவமைக்கும் பணிகளை முழுமையாக நிறைவேற்றுவதற்கு் முடியாதிருந்தது. | பதில் பின்னர் சமர்ப்பிப்பதாக | மாணவர் தலைமுறை மற்றும் நாட்டின் முன்னேற்றத்திற்காக, தற்போதைய உலகிற்கு ஏற்ற மற்றும் ஒப்பீட்டளவில் ஆரம்ப, இ இடைநிலை மற்றும் மூன்றாம் நிலை கல்வியின் மூலம் அடைய வேண்டிய எதிர்பார்த்த மட்டம் மற்றும் அம்மட்டத்தில் உலகக் கல்வியின் குறிகாட்டிகளுடன் ஒப்பிடும் போது எமது நாடாக அடையக் கூடிய மட்டத்தை நோக்கி தேசிய கல்விக் கொள்கையொன்றை தயாரித்தல் வேண்டும். |
| (ஆ) | நிபுணத்துவத்துடன் கூடிய ஆராய்ச்சிகரமான சமூகமொன்று மற்றும் அறிவுடன் தொழிற்சார் நிபுணத்துவத்துடன் மற்றும் திறமையை கொண்டுள்ள சமூகமொன்றை உருவாக்குதல் மற்றும் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க மேம்பாட்டிற்கு சாதகமான சுற்றாடல் முறைமை ஒன்றை வடிவமைத்தல் மூலம் வலய புத்தாக்க கேந்திர நிலையமொன்றாக பின்னணியை வழங்குதல்' என தொலைநோக்கு மற்றும் செயற்பணியாக கொண்ட இந்த அமைச்சின் 2020, 2021 2022 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கை மற்றும் 2023 வரைவு செயலாற்றல் அறிக்கையை பரீட்சிக்கும் போது அமைச்சினால் கடந்த 04 ஆண்டுகள் முழுவதும் ஒரே சவால்களுக்கு தொடர்ந்தும் முகம் கொடுப்பதாக இருந்த போதும் அந்த சவால்களை வெற்றி கொள்வதற்காக முறையான நிரந்தர தந்ரோபாயத்துடன் கூடிய திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் செயற்பட்டு இருக்கவில்லை | 2020, 2021 மற்றும் 2022 ஆரம்ப பகுதியில் கொவிட் 19 தொற்று நிலைமை மற்றும் பொருளாதார சிக்கல் நிலைமை தொடர் இதிலே தொழில் கல்வித்துறையில் நேரடி பின்னடைவுக்கு உட்பட்ட காலப்பகுதியாகும் அதன் காரணமாக ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க பிரிவு முகம் கொடுத்துள்ள சவால்களை வெற்றிகரமாக முகம் கொடுக்கும் பொருட்டு தேசிய ஆராய்ச்சி முகாமையொன்றற அமைச்சு மட்டத்தில் நிறுவுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆராய்ச்சி பிரிவு முகம் கொடுக்கும் சவால்களை குறைப்பதற்கு எதிர்பார்த்து உள்ளதாக | நிரந்தர தந்திரோபாயத் துடன் கூடிய திட்டமொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 திட்டமிடல்**

2023 ஆம் ஆண்டிற்குரிய:தாக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கை திட்டத்தில் ஆண்டிற்குரிய நாளதுவரையாக்கப்பட்ட நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியனர் மற்றும் தற்போது சேவையிலுள்ள பதவியணியனர் தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆம் ஆண்டிற்குரிய: செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டின் எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளுக்காக மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 29,954,974,900 ஆக இருந்த போதும் செயன் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் உள்ளவறான செலவினம் ரூபா 10,915,445,500 ஆக இருந்தது. அதன் பிரகாரம் மொத்த நிதி ஏற்பாட்டில் ரூபா 19,039,529,400 அதாவது 64 சதவீதம் சேமிக்கப்பட்ட காரணமாக எதிர்பார்த்த இலக்கை அடைந்து கொள்ள முடியாதது அவ்வாறே செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் செயன் முன்னேற்ற அறிக்கை இடையே மதிப்பீடு மற்றும் செலவினங்களில் ரூபா 8,208,104,000 ஆன வேறுபாடு காணப்பட்டது. | பதில் பின்னர் தருவதாக | நடைமுறை ரீதியாக செயல்படுத்துவற்கு உள்ள இயலுமையாக திட்டங்களைத் தயாரிப்பதற்கும் தயாரிக்கப்பட்ட திட்டங்களை அடைந்து கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தால் வேண்டும் |
| (ஆ) | 2023 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் எவ்வித செயற்பாட்டை அடைந்து கொள்ளாத 22 துறைகளுக்குரிய 57 செயற்பாடுகள் மாத்திரமாக இருந்ததுடன் அதன் மதிப்பீட்டு பெறுமதி ரூபா 437,427,000 ஆக இருந்தது. மதிப்பீட்டு பெறுமதி இனங்காணப்பட முடியாத செயற்பாடுகளும் அதில் காணப்பட்டன. | பதில் பின்னர் சமர்ப்பிப்பதாக | நடைமுறை ரீதியாக செயல்படக்கூடிய திட்டங்களை தயாரிப்பதற்கும் தயாரிக்கப்பட்ட திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட தகைமையுடைய பயிற்சி பெற்ற தொழிலாளர்களை வெளிநாட்டு சந்தைக்கு வெவ்வேறு தொழில்துறைக்கு அனுப்பும் நோக்கமாக கொண்டு 2021 பெப்ரவரி 09 ஆம் திகதி திறன் அபிவிருத்தி தொழில் துறை கல்வி ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு மற்றும் வெளிநாட்டு தொழில் மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சிக்கிடையே புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப் பட்டிருந்ததுடன் இந்த உடன்படிக்கையின் பிரதான நோக்கமாக பயிற்சி பெற்ற 100,000 தொழிலாளர்களை வெளிநாட்டுக்கு அனுப்புவது இலக்காக இருந்தது. | இந்த அமைச்சின் கீழ் உள்ள தொழில்சார் பயிற்சி நிறுவனங்களில் பயிலுனர்களின் தகவல்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்திற்கு வழங்குவதற்கு தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அப்பணியகத்தின் மூலம் அத்தகவல்களை | நோக்கத்திற்கு உட்பட்ட இலக்கு அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் வெளிநாட்டு தொழில்துறையில் ஆகக்கூடிய கேள்வி காணப்படும் தொழில்களுக்காக பயிற்சியாளர்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | கணக்காய்வு திகதி வரை 5 தடவைகளில் 1606 பயிற்சியாளர்கள் என்ற தகவல்கள் மாத்திரம் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு இருந்ததுடன் அதில் 2 சதவீதம் அளவு மாத்திரமான குறைந்ததாக காணப்பட்டது. வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திடமிருந்து 02 சந்தர்ப்பங்களில் கிடைத்திருந்த 33,596 தொழில் சந்தர்ப்பங்களுக்காக பயிற்சியாளர்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய தொழில் முகவர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அதன் பிரகாரம் இத்தகவல்கள் ஊடாக உரிய முகவர் நிறுவனங்களால் தனியார் பயிற்சியாளர்களை வெளிநாட்டிற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | |
| (ஈ) | சுயதொழில் உருவாக்க மூல ஆரம்ப உபகடனின் (SEPI) கீழ் 2016 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை 1362 நலனாலிகளுக்காக ரூபா 757 மில்லியன் கடன் வழங்குவது இலக்காகக் கொண்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரையில் 1418 நலனாலிகளில் 1,156 நலனாலிகளுக்கு ரூபா 526 மில்லியன் கடன் வழங்கப்பட்டிருந்தது. | 2020, 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட கொரோனா நிலைமை மற்றும் பொருளாதார சிக்கல்கள் காரணமாக பின்னடைவுவொன்று காணப்பட்டது போதும் 2024 ஆம் ஆண்டு வரையில் இந் நிலைமையை தவிர்த்து 2024.03.31ம் திகதி வரை பதிவு செய்யப்பட்ட 82 கடன் விண்ணப்பங் களில் 35 இற்காக ரூபா 29.7 மில்லியன் கடன் வழங்கப்பட்டதாக | இக்கடன் முறைமையில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் பதிவு செய்யப்பட்ட நலனாளிகளுக்கு ஒப்பாக கடன்பெறுவோர் அளவை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டம் அடையப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சூரிய பெனல் முன்மாதிரி செயற் திட்டத்தின் உற்பத்திக்காக வசதிகளை வழங்கும் விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி கல்வி பயிற்சி திட்டத்திற்காக 2016 ஏப்ரல் 06 ஆம் திகதி கொள்கை ரீதியான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் தேசிய நிதியத்தில் ரூபா 240 மில்லியன் பங்களிப்பின் மூலம் 2017 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட இச்செயற் | இச்செயற்திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு வெவ்வேறான தடைகள் எதிர்கொள்ளப்பட்ட காரணத்தினால் செயற் திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அனைத்தையும் நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தவுடன் சில நோக்கங்கள் மாத்திரம் | செயற் திட்டத்தின் நோக்கங்களை தாமதம் இன்றி அடைவதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும |

| | | | |
|---|---|---|---|
| | திட்டத்தின் மீளாய்வாண்டின் இறுதி வரையில் நிதி செயன் முன்னேற்றம் மொத்த நிதி ஏற்பாட்டில் 47 சதவீதம் மாத்திரமாக இருந்தது வெளிக்களத்தில் உள்ள சூரிய பனல் தொடர்பாக 3,500 தொழில்நுட்ப வியலாளர்களைச் (Solar Technicians) சேர்த்துக் கொள்வதற்கு மற்றும் பல்கலைக்கழகங்களில் மின்சக்தி உருவாக்குவதற்காக ஈடுபடுத்தக்கூடிய 10 சூரிய பெனல்களை உற்பத்தி செய்தல் இதன் நோக்கமாக இருந்த போதும் இதுவரை ஏழு வருடங்கள் கடந்து இருந்த போதும் 04 Laboratory Scale Prototype Solar Panel மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டிருந்தன. | நிறைவேற்றப்பட்டிருந்ததாக . | |
| (ஆ) | இளைஞர் ஊழியர் இயலுமையை அபிவிருத்தி, மூன்றாம் நிலை கல்வி மற்றும் சுயதொழில் வெற்றி ஆகிய பெறுபேறுகளை நோக்கமாகக் கொண்டு ஐக்கிய அமெரிக்க குடியரசினால் 06 மில்லியன் டொலர் You lead Phase II நன்கொடையில் 2021-2024 காலப்பகுதிக்காக ஆரம்பிக்கப்பட்டிருந்த துடன் அதன் வழிகாட்டல் மற்றும் கண்காணிப்பு பொறுப்பு திறன் பிரிவுக்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக செயற்பாட்டு ரீதியில் ஈடுபாடு ஒன்று அவதானிக்கப்படவில்லை. மீளாய்வாண்டின் ஜனவரி முதல் ஆகஸ்ட் வரை செலவின அறிக்கையை பரீட்சிக்கும் போது அந்த 08 மாதங்களுக்குரிய வரி தவிர மொத்த செலவினம் ரூபா 600,759,163 ஆக இருந்ததுடன், அதில் 58 சதவீதம் அளவு பிரயாணச் செலவினம், நேர செலவினம் மற்றும் ஏனைய நிர்வாகச் செலவினங்களுக்காக செலவிடப்பட்டு இருந்தன. | You lead செயற்திட்டம் அமைச்சு மற்றும் ஏனைய அரச மற்றும் தனியார் நிறுவனங்களுடன் தொடர்புபட்ட நிகழ்ச்சிகளாக செயற்படுத்தப்படுவதுடன் அமைச்சின் கீழ் வரும் நிறுவனங்கள் ஊடாக செயற்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சிகளுக்காக மாத்திரமாக இருந்ததால் அமைச்சின் நேரடி ஈடுபாட்டினை செயற்படுத்தலாம் என்பதாக | செயற்திட்டத்தின் வழிகாட்டல் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளுக்கு அமைச்சின் ஈடுபாட்டிற்கு உட்படுத்த வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் மற்றும் NVQ மற்றும் NNVQ பாடநெறிகளுக்காக முறையே 7865 பேர் மற்றும் 5429 பேர் என மொத்தம் 13294 பேர் குறைத்து அனுமதிக்கப்பட்டிருந்ததுடன் அது எதிர்பார்க்கப்பட்ட அனுமதிகளில் 24 சதவீத குறைவொன்றாகும். | தொழிற் பயிற்சி பாடநெறிகளுக்காக ஆண்டின் இறுதிவரையில் ஆட்சேர்ப்பு மேற் கொள்ளப்பட்டுள்ளதால் இலக்கினை நிறைவேற்றிக் கொள்ளும் செயற்திட்ட முன்னேற்றத்தை சரியாக தீர்மானிப்பது சிரமமாக இருப்பதாக | பயிற்சி பாடநெறிகளுக்காக அனுமதி இலக்கை நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஈ) | கட்டுநாயக்க பொறியியலாளர் தொழில்நுட்ப நிறுவனத்தின் தொழில்நுட்ப பயிற்சி நடவடிக்கைகளை மேம்படுத்துவது தொடர்பாக அவுஸ்திரேலியா செயற்திட்டத்தின் கீழ் புதிய மூன்று மாடி கட்டிடம் மற்றும் | இச் செயற்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட GRN வழங்கிய சொத்துக்களை கணக்கீடு செய்வதற்கும் கட்டிடங்களின் பெறுமதி தொடர்பாக வழங்கப்பட்ட பெறுமதி | வளங்களை உயர் செயற் திறனாகவும் வினைத்திறனாக வும் பயன்படுத்த நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| வேலைத்தள கட்டிடத்துக்காக ரூபா 326,155,114 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் 2021 திசெம்பர் 6 இல் உள்ளவாறு மதிப்பீட்டு பெறுமதி ரூபா 51,750,000 ஆக இருந்தது. அதன் பிரகாரம் கட்டிட பயன்பாட்டிற்க எடுத்தல் ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டுக்குள் கட்டிடயற்திட்டத்தின் பெறுமதி ரூபா 274,405,114 ஆல் அசாதாரணமாக குறைவடைந்து இருந்தது. அவ்வாறே இச்செயற் திட்டத்தின் கீழ் கட்டுநாயக்க பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு கிடைக்க வேண்டிய ரூபா 13,730,656 ஆன பயிற்சி உபகரணங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தொடர்பாக வழங்கிய விபரங்களின் பிரகாரம் NAITA நிறுவனத்திற்கு 2023 ஆம் ஆண்டில் கணக்குகளைத் தயாரிக்கும் போது உரிய பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. எஞ்சிய செயன் முன்னேற்ற விசாரணை நடவடிக்கைகள் அமைச்சு மூலம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக | எடுத்தல் வேண்டும். |

**3.5 செயற்திட்டங்களை நிறைவேற்றாமல் கைவிடல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை செயற்படுத்தப்பட்ட அண்மையில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை தேசிய நிகழ்ச்சி திட்டத்திற்குரிய ரூபா 5,439,907,245 ஆன பொறுப்புக்கள் அளவு இருக்கையில் செயற்திட்டம் 2020 திசெம்பர் 31 முடிவடையாமல் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே 1000 தேசிய பாடசாலைகளில் உருவாக்கும் நிகழ்ச்சி திட்டத்துடன் ஆரம்பிக்கப்பட்ட ரூபா 2285.2 மில்லியன் அளவிலான தொகை செலவிடப்பட்டு 23 பாடசாலைகள் மாத்திரம் தேசிய பாடசாலைகளாக மாற்றப்பட்டு இடை நடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. | பதில் பின்னர் சமர்ப்பிப்பதாக | ஆரம்பிக்கப்பட்ட செயல் திட்டங்களை உரிய வகையில் பூர்த்தி செய்து எதிர்பார்த்த நலன்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | அண்மித்த பாடசாலை சிறந்த பாடசாலை செயற்திட்டத்தின் கீழ் மத்திய மாகாணத்தில் பரஸ்பர இணக்கப்பாட்டின் பேரில் முடிவுறுத்தப்பட்ட ரூபா 367,341,909 பெறுமதியான 45 நிர்மாண வேலைகளும் நிதி ஏற்பாடு வரையறுக்கப்பட்டமையால் பகுதி அளவில் நிர்மாணிக்கப்பட்ட ரூபா 351,839,473 பெறுமதியான 32 நிர்மாஷ வேலைகளும் மீளாய்வாண்டு இறுதிவரையில் காணப்பட்டன. | பதில் பின்னர் சமர்ப்பிப்பதாக | ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்களை நிர்ணயிக்கப்பட்ட பிரகாரம் முடிவுறுத்தி எதிர்பார்த்த பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | 1000 இரண்டாம் நிலை பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் தேசிய நிகழ்ச்சி திட்டத்தின் மூலம் பாடசாலைகளில் தொழில நுட்ப ஆய்வுகூடங்களை நிர்மாணிக்கும் செயற் திட்டத்தின் கீழ் ரூபா 24,689,403 தொகை செலவழித்து 3 ஆய்வுகூடங்களின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு இடை நடுவில் நிறுத்தப்பட்டிருந்தன. | பதிலை பின்னர் சமர்ப்பிப்பதாக | 1000 இரண்டாம் நிலை பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் தேசிய நிகழ்ச்சி திட்டத்தின் மூலம் பாடசாலைகளில் தொழில்நுட்ப ஆய்வுகூடங்களை |

| | | | |
|---|---|---|---|
| | | | நிர்மாணிக்கும் செயற் திட்டத்தின் கீழ் ரூபா 24,689,403 தொகை செலவு செய்யப்பட்டு 3 ஆய்வுகூடங்களின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு இடை நடுவில் நிறுத்தப்பட்டிருந்தன. |
| (ஈ) | 2021 ஜனவரி 04 ஆம் திகதிய 2209/14 ஆம் இலக்க வர்த்தமானி பத்திரத்தில் விசேட முன்னுரிமைகளின் கீழ் இனங் காணப்பட்ட 05 நகர பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்கும் செயற்திட்டத்திற்காக 2021,2022 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 100 மில்லியன் ரூபா 200 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டில் கேகாலை பிரதேசத்தில் மாத்திரம் நகர கல்கலைக்கழகத்திற்காக கட்டிட தொகுதி ஒன்று தெரிவு செய்யப்பட்டு அதற்காக ரூபா 16.738 மில்லியன் செலவிடப்பட்டு இருந்தது. மீளாய்வாண்டிலும் ரூபா 200 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூபா 1.202 மில்லியன் செலவிடப்பட்டு செயற்திட்டம் இடை நடுவில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் செலவிடப்பட்ட ரூபா 18 மில்லியன் தொகை விளைவற்ற செலவினம் ஒன்றாக இருந்தது. | 03/2022 ஆம் இலக்க மற்றும் 2022.04.26 ஆந் திகதிய தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை மூலம் அரச செலவினங்களுக்காக வரையரை விதிக்கப்பட்டு இருந்ததால் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை அதற்கு இடையே மேற்கொள்ள முடியாதிருந்ததாக | புதிய நிர்மாணங்களில் இருந்து புறம்பாக இருக்கும் வளங்களிலிருந்து ஆகக் கூடிய நன்மைகளை பெற்றுக் கொள்ள நடவடிக்கைகள் வேண்டும். |

### 3.6 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் பேரில் மருத்துவ பட்டப்பின் படிப்பு அபேட்சகர்களின் எண்ணிக்கையை 300 ஆல் அதிகரித்தல் உட்பட பல நோக்கங்களின் அடிப்படையில் 2019 ஜூன் 24 ஆம் திகதி ரூபா 1,138.5 மில்லியன் பெறுமதிக்கு கராப்பிட்டிய வைத்தியசாலையில் பேராசிரியர் பிரிவு ஒன்றை அமைக்கும் செயற்திட்டம் தனியார் கம்பெனி ஒன்றுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கை பிரகாரம் 2022 ஜூன் 16 ஆம் திகதி வேலை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதும் 2024 ஜூன் மாதம் 05 ஆம் திகதி வரை திகதி நீடிக்கப்பட்டு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. எனினும் 2024 பெப்ரவரி 29 ஆம் திகதி வரையிலும் செயற்திட்டத்தின் பௌதீக செயன் முன்னேற்றம் 64 சதவீதம் மாத்திரமாக இருந்தது. | பல்வேறு காரணங்களினால் செயற்திட்டத்தின் செயல் முன்னேற்றம் ஆரம்பித்தின் போது மந்த கெதியில் இருந்த போதும் வெற்றிகரமாக முடிவுறுத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | செயற்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்ளக் கூடிய வகையில் உடன்படிக்கை பிரகாரம் உரிய திகதியில் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கராப்பிட்டிய வைத்திய பீடத்தில் அனுமதிக்க கூடிய மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கிலும் ஆராய்ச்சி இயலளவு (Research Capabilities) என்பவற்றை அதிகரிக்கும் நோக்குடன் உயர்கல்வி பிரிவினால் ஆய்வு கூடங்கள், பரீட்சை மற்றும் விரிவுரை மண்டப வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூபா 1,092 மில்லியன் ஒப்பந்த பெறுமதியுடன் 2020 ஜுன் 01 ஆம் திகதி மத்திய பொறியியல்சார் உசாத்துணை பணியகத்திற்கு ருஹுனு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்காக 12 மாடிகளுடன் கூடிய கட்டிடம் ஒன்றை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கை பிரகாரம் 2021 செப்டம்பர் 06 ஆம் திகதி வரையில் வேலை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதும் 2024 ஏப்ரல் 05 ஆம் திகதி வரை திகதி நீடிப்பு வழங்கப்பட்டிருந்த போதும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் இச்செயற் திட்டத்தின் 10 மாடிகள் வரை கொங்கிரீட் தளம் இடுதல் மேற்கொள்ளப்பட்டு 07 ஆம் மாடி வரை உள்ளக கட்டமைப்பு தயாரித்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 இல் செலவினம் ரூபா 1015.87 மில்லியனாக இருந்த போதும் பௌதீக முன்னேற்றம் 50 சதவீதமான அளவில் காணப்பட்டது. | நிர்மாண பொருட்களின் விலை அதிகரித்துச் செல்கின்றமை, சந்தையில் நிர்மாண பொருட்களில் காணப்படும் பற்றாக்குறை போன்ற காரணங்களால் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட பிரகாரம் ஒப்பந்தக்காரர் களுக்கு பணம் செலுத்துவதற்காக திறைசேரியால் பணம் விடுவிக்காமை போன்ற காரணங்கள் அடிப்படையில் செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் மந்தமான நிலைமையொன்றில் காணப்பட்ட போதும் தற்போது விரைவில் வேலைகளை நிறைவேற்று வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக | செயற்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்ளக் கூடிய வகையில் உடன்படிக்கை பிரகாரம் உரிய திகதியில் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும். |
| (இ) | ருஹுனு பல்கலைக்கழகத்தின் இணைந்த விஞ்ஞானங்கள் பீடத்தை நிறுவும் செயற் திட்டம் | | |
| | உயர் கல்வி பிரிவினால் மருத்துவ ஆய்வு கூட பயிற்சியாளர்களின் பற்றாக்குறையை தவிர்க்கும் முன்னணி நோக்கமாகக் கொண்டு சுகாதாரத் துறைக்கு உரிய நான்கு புதிய பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டு அதன் மூலம் ஓராண்டிற்கு 350 பட்டதாரிகள் அளவில் உருவாக்குவதற்கு சமூக செயற்பாடுகள் மற்றும் நோய் நொடிகள் போன்றவற்றால் கை, கால் இழந்தவர்களுக்கு நவீன தொழில்நுட்ப முறைமைகளுக்கு இணங்க வடிவமைக்கப்பட்ட செயற்கை உப பாகங்களை உற்பத்தி செய்து முழு தீவும் மேவுகை செய்யப்படும் வகையில் வழங்கும் நோக்கில் மேற்படி பீடம் நிர்மாணிக்கும் ஒப்பந்தம் 2020 திசெம்பர் 3 ஆம் திகதி ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு ரூபா 1,501 மில்லியனுக்கு வழங்கப்பட்டிருந்தது செயற்திட்டம் 2023 ஜுன் 02 ஆம் திகதி பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதும் 2024 ஏப்ரல் 10 ஆம் திகதி வரை திகதி நீடிக்கப்பட்டு ஒப்பந்த கம்பெனியால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதும் 2024 ஏப்ரல் 10 ஆம் தேதி வரையிலும் | கோவிட் தொற்று நாட்டில் காணப்பட்ட பொருளாதார சிக்கல்கள், சந்தையில் நிர்மாண பொருட்களில் காணப்படும் பற்றாக்குறை மற்றும் போதியளவில் நிதி கிடைக்காமை காரணமாக எதிர்பார்த்த காலப் பகுதியில் செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. தற்போது மிக விரைவில் பூர்த்தி செய்து இறுதி கட்டத்தின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் மிக விரைவில் கட்டிடத் தொகுதியை மாணவர் உரித்துக்கு கையளிக்க உள்ளதாக | செயற்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்ளக் கூடிய வகையில் உடன்படிக்கை பிரகாரம் உரிய திகதியில் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை 2023 திசெம்பர 31 இல் உள்ளவாறு செலவினம் ரூபா 1398.7 மில்லியனாக இருந்ததுடன் பௌதீக முன்னேற்றம் 91 சதவீதமாக இருந்தது. | | |
| (ஈ) ருஹுனு பல்கலைக்கழகத்தின் கடற்படை கற்கைகள் மற்றும் கடற்படை விவகாரங்கள் தொடர்பான பிரிவொன்றை உருவாக்குதல் | | |
| அடிப்படை கடல் பொறியியலில் கடற்படை வடிவமைப்பு (Naval architecture) மற்றும் பட்டப் படிப்பு பாடநெறி (Degree Programme) மற்றும் கடற்படை கற்கைகள், படகு மற்றும் கப்பல் நிர்மாண கைத்தொழிலுக்காக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி வசதிகள் அபிவிருத்தி மற்றும் அத்தியாவசிய ஆய்வுகூட உபகரணங்களை கொள்வனவு செய்தல், காணப்படும் பட்டப்படிப்பு நிகழ்ச்சிகளுக்கு வசதிகளை வழங்குவதற்கு தேவையான விசேட பொறியியல் செயலமர்வுகளை நடத்துதல் மற்றும் ஆரம்ப நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக உயர்கல்வி பிரிவால் இச்செய்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2019 மே 28 ஆம் திகதி மத்திய பொறியியல் சேவை தனியார் கம்பெனிக்கு ரூபா 436.5 மில்லியன் பெறுமதிக்கு இந்த செயற்திட்டம் கையளிக்கப்பட்டிருந்தது. அச்செயற்திட்டத்தின் உடன்படிக்கையின் பிரகாரம் 2021 ஜுலை 31 ஆம் திகதி அளவில் வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. பல சந்தர்ப்பங்களில் திகதி நீடிக்கப்பட்டு இறுதியாக 2024 நவம்பர் 26 ஆம் திகதி வரை திகதி நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கை பிரகாரம் 2024 பெப்ரவரி 29 ஆம் திகதி வரை செயற்திட்டத்தின் பொறிகள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை பெற்றுக்கொள்ளப்பட வேண்டி இருந்த போதிலும் அதற்காக 2022 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 5 மில்லியன் நிதி ஏற்பாடு அவ்வாண்டு இறுதியின் போதே சேமிக்கப்பட்டு இருந்தது செயற் திட்டத்திற்காக 2023 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டில் 42 சதவீதம் அளவில் ஆண்டின் இறுதி வரையில் பயன்படுத்தப்பட்டிருந்தது. | பெறுகை நடவடிக்கை களுக்காக ரூபா 400 மில்லியன் ஒன்று ஒதுக்கப் பட்டிருந்த போதும் பெறுகை கால எல்லைக்குள் ரூபா 400 மில்லியன் ஆன நிதி ஏற்பாடு 2023 ஆம் ஆண்டில் இச்செய்திட்டத்திற்காக முழுமையாக பயன்படுத்த முடியாதென குறிப்பிடப்பட்டு அத்தொகையில் ரூபா 232 மில்லியனை ருஹுணு பல்கலைக்கழகத்தின் ஏனைய செயற்திட்டங்களுக்கு மாற்றுமாறு பல்கலைக்கழகத்தால் அறிவிக்கப்பட்டிருந்ததால் அத்தொகையை ஏனைய செயற்கை திட்டங்களுக்கு மாற்றப்பட்டன.அதன் பிரகாரம் இச்செய்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட அனைத்து நிதி ஏற்பாடும் முழுமையாக 2023 ஆம் ஆண்டின் போது பயன்படுத்தப்பட்டுள்ளதாக | நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காக முழுமையாக பயன்படுத்தப்பட்டு செயற் திட்டத்தின் நோக்கங்களை அடைந்து கொள்ளக்கூடிய வகையில் உடன்படிக்கை பிரகாரம் உரிய திகதியில் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| (உ) இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்தின் சுகாதார சுகாதார பாதுகாப்பு விஞ்ஞான பீடத்திற்காக கட்டிட தொகுதி ஒன்றை நிர்மாணிக்கும் செயற்திட்டம் | | |
| இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மற்றும் அரபு பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியத்துடன் (KFAED) உயர்கல்வி அமைச்சினால் 2016 மார்ச் 24 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட 940 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்தின் சுகாதார பாதுகாப்பு விஞ்ஞான பீடத்திற்காக கட்டிட தொகுதி ஒன்றை நிர்மாணிக்கம் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டதுடன் அதன் மூலம் 10 மில்லியன் குவைத் தினார் கடன் தொகையொன்று வழங்குவதற்கு இணங்கப்பட்டு இருந்தது. ரூபா 4,514 மில்லியன் செலவிடப்பட்டு பீடத்தின் கட்டிடத் தொகுதியின் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும் செயற்திட்டத்தின் எஞ்சிய வேலைகள் ஒப்பந்த செயற்பாட்டில் இருந்து நிறுத்தப்பட்டு அதன் பௌதீக முன்னேற்றம் 10 சதவீத மட்டத்தில் காணப்பட்டது. செயற்திட்டத்தின் ஊடாக கொள்வனவு செய்யப்பட்ட வேண்டிய கற்றல் உபகரணங்கள் கொள்வனவின் முன்னேற்றம் 40 சதவீதமாக இருந்ததுடன் 2022 ஜுன் 08 ஆம் திகதி அளவில் கடன் தொகை வழங்குவது இடைநிறுத்தப்பட்டிருந்ததால் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தன. | கடன் மீளமைப்பு செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டு இலங்கை அரசினால் வெளிநாட்டு கடன் வழங்குனர் களுக்கு நிலுவை கடன் தவணை மீளச் செலுத்தும் வரை குவைத் நிதியத்தின் மூலம் பணம் விடுவிக்கபடாது எனவும், செயற்திட்டத்தின் தற்போதய நிலைமையை திறைசேரிக்கு தெளிவுபடுத்தியதன் பின்னர் உபகரணங்கள் கொள்வனவுக்காக உள்நாட்டு நிதியத்தில் இருந்து ரூபா 300 மில்லியன் 2024 ஆம் ஆண்டுக்காக ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்து கொள்ளும் வகையில் உடன்படிக்கை பிரகாரம் உரிய திகதியில் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு உரிய உத்தியோகத்தர்கள் கவனம் செலுத்த வேண்டும். |
| (ஊ) மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டம். | | |
| 2021 மார்ச் 22 ஆம் திகதிய ED/HE/PL/ 2021/18 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் தற்போது தேசிய சுகாதார தரத்தை மேம்படுத்துவதற்காக சேவைகளை வழங்கக்கூடிய மருத்துவர்கள் எண்ணிக்கையை அதிகரிக்கும் தேவைப்பாட்டின் பேரில் உயர்கல்வி பிரிவினால் இம்மருத்துவ பீடத்தை ஸ்தாபிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. 2023 பெப்ரவரி 13 ஆம் திகதி தென ஆசிய தொழில்நுட்ப மற்றும் மருத்துவ நிறுவனத்தின் (SAITAM) மற்றும் வைத்தியர் நெவில் பெர்னாந்து போதனா வைத்தியசாலையின் (NFTH) உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் ஏனைய வளங்களை மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்கு வழங்குவதற்கு 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 20 ஆம் திகதி அமைச்சரவை பத்திரம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டு இருந்த போதும் அறிக்கை திகதி வரையிலும் அங்கீகாரம் | தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர்கள் குழுக்களுக்காக வைத்தியர் நெவில் பெர்னாந்து வைத்தியசாலையின் பயிற்சி வசதிகளை வழங்கும் நடவடிக்கைக்காக தற்போது வேலை திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அரசினால் கடன் தவணை மற்றும் வட்டி செலுத்தாததன் பேரில் அவர்களால் செயற்திட்டத்திற்காக பணத்தை விடுவித்தல் இடம்பெறவில்லை. கடன் தொகை தொடர்ச்சியாக செயற்பாட்டு நிலைமைக்கு வந்தால் தேவையான ஆரம்ப நடவடிக்கைகளை | அச்செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கிடைத்திருக்கவில்லை. எனினும் 03 குழுக்கள் அனுமதிக்கப்பட்டிருக்கையில் பீடத்தின் தொகுதி ஒன்றும் சிகிச்சை பயிற்சிகுத் தேவையான வசதிகள் இல்லாமையால் 2023 ஆம் ஆண்டிற்காக செய்யப்பட்ட ரூபா 50 மில்லியன் நிதி ஏற்பாடு மீளாய்வாண்டு இறுதிவரையிலும் முழுமையாக பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | மேற்கொள்வதற்காக இந்த ரூபா 50 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதும் கடன் தொகை செயற்பாட்டு நிலைமையில் இல்லாததால் நிதி ஏற்பாட்டினை பயன்படுத்த முடியாதிருந்ததாக | |
| (எ) | 2016 பெப்ரவரி 11 ஆம் தேதி அமைச்சரவை பத்திரம் ஒன்று மூலம் தேசிய விஞ்ஞான நிலையமொன்றை அமைப்பதற்கு வழங்கப்பட்டிருந்த அங்கீகாரத்தின் பேரில் தேவையான காணிப்பகுதியை கையேற்பதற்கு நகர அதிகாரசபைக்கு ரூபா 280 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதன் உரித்தை அமைச்சுக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | 2021 ஆம் ஆண்டின் பின்னர் இச்செயற்திட்டத்துக்காக பணம் கிடைக்காததால் நிர்மாண செயற்பாடுகளை ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப கைத்தொழில் பூங்காவொன்றை ஆரம்பிக்கும் நோக்கில் அமைச்சரவை விஞ்ஞாபன மொன்று சமர்ப்பிக் கப்பட்டுள்ளதாக | அமைச்சுக்குரிய சொத்துக்களை கையேற்று எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.7 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதும் செயன்முன்னேற்றம் கண்டிராத செயற்திட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஊழிய சந்தையில் கூடிய கேள்வியுள்ள பாடநெறிக்காக மாணவர்களை அனுமதித்தலை அதிகரிக்கும் நோக்கில் திறன் நுட்ப பிரிவினால் தொழில்சார் பயிற்சி நிலையங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்திக்காக மீளாய்வாண்டு இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை தேசிய பயிலுனர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகாரசபைக்கு மற்றும் இலங்கை கடல்சார் பல்கலைக்கழகத்திற்கு ரூபா 41.33 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் பெற்றுக்கொள்ளப்பட்ட செயன் முன்னேற்றம் ரூபா 2.85 மில்லியன் ஆக இருந்தது. | வெவ்வேறு காரணங்களால் இந்த செலவின விடயங்களில் நிதி ஏற்பாட்டை பயன்படுத்த முடியாமல் இருந்தத்துடன் செயலாளரின் அங்கீகாரத்தின் பேரில் நிதி ஏற்பாடுகளில் இருந்து ஒரு பகுதி ஏனைய தலைப்புகளுக்கு மாற்றப்பட்டதாக | திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றி தொழில்சார் பயிற்சி பிரிவு அபிவிருத்திக்கு உரிய அதிகாரிகளால் தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | இளைஞர் தலைமுறையை தொழில்நுட்ப பயிற்சிக்கு கவருவதற்காக டெக் பூங்கா நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தொழில்நுட்ப கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழக கல்லூரிகள் அவற்றில் உள்ளக | கடந்த காலப்பகுதிகளில் நிர்மாண மூலப் பொருட்களில் அடிக்கடி விலை தளம்பல் இடம்பெற்றதன் பேரில் அதற்காக தேவையான அங்கீகாரத்தை வழங்கும் | எதிர்பார்க்கப்பட்ட செயற்திட்டங்களை தாமதம் இன்றி நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| நிர்மாண வடிவமைப்பு மாதிரி ஒன்றின் கீழ் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 300 மில்லியன் ஆன நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் ஆண்டின் இறுதி வரையில் செலவினம் ரூபா 87.25 மில்லியன் ஆக இருந்தமையால் கையேற்கப்பட்டிருந்த நிதி செயன் முன்னேற்றம் 29 சதவீதம் மாத்திரமாக இருந்தது. | செயற்பாட்டில் சிக்கல் காணப்பட்டதாக |

**3.8 ஏனையவை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2011 ஆம் ஆண்டில் க/தர்மராஜ வித்யாலயத்தின் அழகியல் கலைகட்டிடத்தின் பின்புறமாக மதில் ஒன்றை நிர்மாணிப்பதற்காக மத்திய மாகாண கல்வி பணிப்பாளர் மற்றும் தனியார் நிர்மாண நிறுவனம் ஒன்றுடன் ரூபா 3,215,887 இற்கு 2011 செப்டம்பர் 6 ஆம் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த துடன் ரூபா 4,036,784 தொகை மதிற்சுவரை பூர்த்தி செய்வதற்காக கொடுப்பனவு செய்யப்பட்டு இருந்தது. எனினும் 2021 நவம்பர் 8 ஆம் திகதி அளவில் சுவர் உறுதியற்ற நிலைமையில் காணப்பட்டது. | தடுப்புச் சுவரின் உறுதியற்ற நிலைமைக்கு காரணத்தை கண்டுபிடிப்பதற்கு அரச நிறுவனம் ஒன்றுடன் தொடர்புபடுத்தப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக | சரி செய்வதற்கு எதிர்வரும் நடவடிக்கைகள் மிக விரைவில் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மத்திய மாகாணத்தின் கல்வித் திணைக்களத்திற்கு கிடைத்திருந்த நிதி ஏற்பாட்டின் பேரில் கண்டி தர்மராஜ் கல்லூரியின் சிற்றுண்டிச்சாலை நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அதற்காக ரூபா 4,400,000 தொகை 2023 செப்தம்பர் 18 ஆம் திகதி வரையில் ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டு இருந்தது. இந்நிர்மாணத்தின் வேலைகள் இடை நடுவில் நிறுத்தப்பட்டு இருந்ததுடன் 2022 திசெம்பர் 20 ஆம் திகதி இரு தரப்பினரின் இணக்கப்பாட்டின் பேரில் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் | கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட வில்லை எனவும் முடியாதா இருந்ததாகவும் அரசின் நிதி ஏற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்ட போதும் பணம் கிடைக்காமையால் இந்நிர்மாணத்தை நிறுத்துவதற்கு நேர்ந்துள்ளதாகவும் | கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு முன்னர் உரிய அறிக்கைகளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் நிதி ஏற்பாடுகளை பெற்றுக் கொண்டு வேலைகளை பூர்த்தி செய்யும் நோக்கில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உடற்பயிற்சி நிலையம் ஒன்றாக பயன்படுத்தப்பட்டு இருந்தது. மண் சரிவு ஆபத்துள்ள இடம் ஒன்றில் நிர்மாணிக்கப்பட்டிருந்த இக்கட்டிடத்திற்காக தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் பரிந்துரையும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை.

**3.9 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டு வரையில் சர்வதேச பாடசாலைகளை ஒழுங்குபடுத்துவதற்காக பிரமாணங்களை தயாரிப்பதற்கும் அரசின் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளுக்காக சட்டங்களை தயாரிப்பதற்கும் எதிர்பார்க்கப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக எவ்வித நடைமுறை ஒன்றும் எடுக்கப்பட்டிருக்கவில்லை இது தொடர்பாக தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் வழங்கப்பட்ட அரசு அல்லாத பாடசாலைகள் தொடர்பான ஒழுங்குபடுத்தல் செயற்பாடு என்ற தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட விசேட செயலாற்றல் அறிக்கையிலும் அத்தேவைப்பாடு தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருந்தது. | சர்வதேச பாடசாலைகளை ஒழுங்குபடுத்துவது தொடர்பாக நடவடிக்கைகள் கல்வி அமைச்சின் கீழ் மேற் கொள்ளப்படவில்லை என்பதாகவும் தனியார் பாடசாலை கிளையால் தெளவுபடுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும் | காணப்படும் சட்ட ரீதியான தடைகளை இனங்கண்டு காணப்படும் பிரமாணங்களை திருத்தி கல்வி தொடர்பான செயற்பாடுகளை கல்வி அமைச்சின் கீழ் ஒழுங்குபடுத்தும் பிரகாரம் நியதிகள் தயாரிக்கப்பட வேண்டும். அப்பாடசாலைகளை கல்வி அமைச்சின் ஒழுங்குபடுத்தலின் கீழ் வருடாந்த அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெற்றுக் கொள்ளும் வகையில் நடைமுறை ஒன்றை தயாரித்து கண்காணிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2011 ஆம் ஆண்டில் 1000 இரண்டாம் நிலை பாடசாலைகள் அபிவிருத்தி செய்வதற்காக தேசிய நிகழ்ச்சி திட்டம், அண்மையில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை தேசிய நிகழ்ச்சி திட்டம், 1000 தேசிய பாடசாலைகளை நிறுவும் நிகழ்ச்சி திட்டம் ஆகிய மூன்று நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும் ஒரு நிகழ்ச்சியேனும் முழுமையான செயல்பாட்டை அடைந்து கொள்வதற்கு முன்னர் இன்னும் ஒரு நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. குறித்த | பதிலை பின்னர் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சிகளை உரிய காலப்பகுதியில் பூர்த்தி செய்ததன் பின்னர் புதிய நிகழ்ச்சி திட்டங்களை ஆரம்பிக்க வேண்டியதுடன் அந்தந்த நிகழ்ச்சிகளின் பிரகாரம் செயன் முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்டு தொடர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காலப்பகுதியில் நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்துவதும் அதில் ஒரு பகுதி நிறைவேற்றப்பட்டமை மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்த போதும் அந்நிகழ்ச்சிகளை பூர்த்தி செய்வது தொடர்பாக எந்த ஒரு செயலாற்றல் அறிக்கையில் தகவல்களும் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை | | |

## 3.10 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இரண்டாம் நிலை கல்வி பகுதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான கணக்காய்வுப் பரிசோதனை (SESIP) | | |
| (i) 2023 ஆம் ஆண்டிற்காக 07 பிரதான ஒதுக்கீட்டு இணைப்பு குறிகாட்டிகளின் கீழ் 22 உப ஒதுக்கீடு இணைப்பு குறியீடுகளுக்காக ரூபா 98.93 மில்லியன் டொலர் ஒதுக்கப்பட்டிருந்த போதும் அந்த 22 உப ஒதுக்கீட்டு இணைப்பு குறிகாட்டிகளில் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டின் போது அடையப்படாத 12 உப ஒதுக்கீட்டு இணைப்பு குறிகாட்டுதல் உள்ளடக்கப்பட்டிருந்தன. ஆண்டின் போது இந்த ஒதுக்கீட்டு இணைப்பு குறிகாட்டிகளில் ஒன்றையேனும் அடைந்து கொள்ளாமை காரணமாக 2023 ஆம் ஆண்டில நிகழ்ச்சித்திட்டங்கள் ஒதுக்கப்பட்டிருந்த மேற்படி மொத்த பணத்தையும் பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. | செயற்படுத்துதல் தாமதமானதால் 2023 ஆம் ஆண்டுக்குரிய ரூபா 98.93 மில்லியன் நிதி வளங்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் இணக்கப்பாட்டின் பேரில் 2024 ஆம் ஆண்டு வரை காலம் தாழ்த்துவதற்கு நேர்ததாக | இலக்கிடப்பட்ட ஒதுக்கீட்டு இணைப்பு குறிகாட்டிகளை உரிய காலப்பகுதியில் அடைந்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதனை கவனத்தில் கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வாண்டில் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்பட்டிருந்த நிதி இலக்கு 381.88 மில்லியன் டொலர் ஆக இருந்த போதிலும் அடையபட்ட அளவு 216.27 மில்லியன் டொலர் அதாவது 57 சதவீதம் மாத்திரமாக இருந்தது. | தேசிய கல்விக் கொள்கை இதுவரை அங்கீகரிக்கப்படாததன் பேரில் 2023 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை நோக்கி அடைய முடியாதிருந்ததன் பேரில் செயலாற்றல் எதிர்பார்க்கப்பட்ட இலக்கை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டது | எதிர்பார்க்கப்பட்ட இலக்கை உரிய காலப்பகுதியில் அடைந்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும் |
| (iii) | ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் மேற்கொள்ளப் பட்டிருந்த கடன் உடன்படிக்கையின் இரண்டாவது பிரிவின் உப பிரிவின் 2.02/2.03 இன் பிரகாரம் இலங்கை அரசாங்கத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் தொகை அடிப்படையில் வேறுபடக் கூடிய வகையில் வட்டி விகிதத்தின் கீழ் வட்டித் தொகைக்கு மேலதிகமாக விடுவிக்கப்படாத கடன் தொகை அளவின் அடிப்படையில் 0.15 சதவீத கடப்பாடு கட்டணமும் செலுத்த வேண்டும். அமைச்சினால் ஒதுக்கீட்டு இணைப்பு குறிகாட்டியை செயற்படுத்துவதில் தாமதத்தின் பேரில் ரூபா 103,350,603 ஆன கடப்பாடு கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்ததுடன் அது விளைவற்ற செலவினம் ஒன்றாக இருந்தது. 2021,2022 ஆம் ஆண்டுகளின் போது நாட்டில் காணப்பட்ட கொவிட் தொற்று பொருளாதார சிக்கல் அரசியல் இஸ்திரமற்ற தன்மை தொடர்பாக திறைசேரி ஊடாக எழுத்து மூலம் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு விடயங்களை | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் விடுவிக்கப் படாத பெறுமதிக்கு கடப்பாட்டு கட்டணங்கள் செலுத்த நேர்வதுடன் பெற்றுக்கொண்ட கடன் அளவிற்கு வட்டித் தொகையும் செலுத்த வேண்டும் என | நாடு முகங் கொடுத்துள்ள சீரற்ற நிலைமை தொடர்பாக திறைசேரி ஊடாக எழுத்து மூலம் ஆசிய அபிவிருத்தி வங்கி அறிவிக்கப்பட்டு கடப்பாடு கட்டணங்களை அகற்றுவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விளக்கி கடப்பாடு கட்டணங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (iv) | செயற்பாட்டு குழு அறிக்கையின் பிரகாரம் தற்போது இந்நிகழ்ச்சி வெவ்வேறு காரணங்களின் பேரில் பின்னடைவுக்கு உட்பட்டுள்ளதாகவும் புதிய கல்வி சீர்திருத்தத்தை தேசிய கல்விக் கொள்கை சட்டகத்தின் பிரகாரம் செயற் படுத்துவதற்கும் தற்போது தயாரிக்கப்பட்டுள்ள விடயப் பரப்பு மற்றும் அண்மித்த திருத்தங்களை செய்வதற்கும் புதிய கல்வி சீர்திருத்தங்கள் தொடர்பாக சமூகத்தை நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குவதற்கும் மிக நீண்டகாலம் ஒன்று எடுப்பதால் இந்த புதிய நிகழ்ச்சி திட்டம் 2027 ஆம் ஆண்டின் வரை நீடிக்கப்பட வேண்டும் என கல்வி அமைச்சு (MOE), தேசிய கல்வி நிறுவகம் (NIE) மற்றும் பரீட்சை திணைக்களம் (DOE) என்பவற்றுடன் இணைந்து தீர்மானிக்கப்பட்டிருந்த போதும் கணக்காய்வு திகதி வரையில் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் அதனுடன் இணைந்து அது தொடர்பாக இணக்கப்பாட்டிற்கு வந்திருக்கவில்லை. | நிகழ்ச்சித்திட்டங்களைப் பூர்த்தி செய்யும் காலப்பகுதியை தீர்மானிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக | உரிய காலப்பகுதியில் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (v) | 2023 பெப்ரவரி 14 ஆம் திகதிய அமப/23/0103/604/010 ஆம் இலக்க செயற்திட்ட அலுவலகம் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு மீளாய்விற்கான அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் SESIP நிகழ்ச்சி திட்டத்தின் பதவியணி 10 வரை குறைப்பதற்கு அங்கீகாரம் | அமைச்சரவை அங்கீகாரத்தின் பேரில் 2024 பெப்ரவரி 12 ஆம் திகதி முதல் 12 பதவியணியினருடன் பேணி செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | கல்வி அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் பதவியணியினை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 19 பதவிகளில் உத்தியோகத்தர்கள் சேவைகள் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அதில் மாகாண மதிப்பீடு மற்றும் 09 ஒழுங்குபடுத்தல் உத்தியோகத்தர்களும் 06 மாகாண கூட்டமைப்பு உத்தியோகத்தர்களும் உள்ளடக்கப்பட்டிருந்தனர். மீளாய்வாண்டில் எந்தவொரு ஒதுக்கீட்டு இணைப்பு இலக்கங்களை அடைந்து கொள்ளாதிருக்கையில் இந்த மாகாண பிரதிநிதிகளுக்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 6,300,000 ஆன படிகள் விளைவற்ற செலவினம் ஒன்றாக இருந்தது. | | |
| (vi) | க.பொ.த (உ.த) உயிரியல் முறைமை தொழில்நுட்ப பாடவிதான செய்முறை செயற்பாடுகளுக்காக 2023 நவம்பர் 10 ஆம் திகதி தெரிவு செய்யப்பட்ட 285 பாடசாலைகளுக்காக ரூபா 16,000,000 தொகை பாடசாலை அபிவிருத்தி சங்க கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட்டிருந்தன. 2024 மார்ச் 31 இல் உள்ளவாறு கிடைத்த தகவல்களின் பிரகாரம் 08 பாடசாலைகளால் ரூபா 421,980 ஆன பணத்தை மாத்திரம் பயன்படுத்தி இருந்ததுடன் பயன்பாட்டுக் காலத்தை 2014 மே 31 வரையில் மேலும் நீடித்துக் கொள்ளப்பட்டிருந்தது. | நிதிப் பயன்பாட்டு காலத்தை 2024 மே 31 வரை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுத்ததாகவும் தற்போது உரிய செயல் முன்னேற்றம் தொடர்பாக அறிக்கைகளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக | நோக்கங்களை நிறைவேற்றக்கூடிய செயற்பாடுகளை பற்றி பொறுப்பான உத்தியோகத்தர்கள் கவனம் கொள்ள வேண்டும் |
| (vii) | 09 மாகாணங்களை மேவுகை செய்யும் வகையில் நிகழ்ச்சித் திட்டங்களை செயல்படுத்தி பாடசாலை மற்றும் ஆய்வுகூட பொருட்கள் மற்றும் ஆய்வுக்கூட உபகரணங்களின் தேவைப்பாடு காணப்படுகின்ற ஏனைய பாடசாலைகளுக்கு இடையே | உரிய தகவல்களை பாடசாலைகளில் இருந்து பெற்றுக் கொள்வதற்கு தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்குரிய உபகரணங்களை கொள்வனவு செய்து மாணவர்களுக்கு பயன்படுத்துவதற்கு திட்டமிடுவதன் மூலம் செயலாற்றலை அடைந்து கொள்வதற்கு உரிய அதிகாரிகள் கவனம் |

| | | | |
|---|---|---|---|
| | தெரிவு செய்யப்பட்ட 233 பாடசாலைகளுக்காக ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் இரசாயனட பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 200,000 வீதம் ரூபா 46,600,000 நிதி ஏற்பாடு ஒன்று மாகாண கல்வி திணைக்களங்களிற்கு 2023 ஜுலை 31 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது கல்வி பணிப்பாளர் (விஞ்ஞானம்) தினால் வழங்கப்பட்ட 2023 செப்தெம்பர் 21 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் நவம்பர் 10 ஆம் திகதிக்கு முன்னர் மேற்படி செலவினத்தை மேற்கொண்டு செலவினங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2024 மார்ச் 31 ஆம் திகதி 73 பாடசாலைகள் மாத்திரம் சமர்ப்பித்திருந்த செயன் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் அத்திகதியில் ரூபா 13,021,754 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததுடன் மொத்த நிதி ஏற்பாட்டு பெறுமதியில் அது 28 சதவீதம் மாத்திரமாக இருந்தது. | | செலுத்துதல் வேண்டும் |
| (viii) | 2022 ஆம் ஆண்டின் போது இரண்டாம் நிலை கல்வியின் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் தெரிவு செய்யப்பட்ட 750 பாடசாலைகளில் இலக்கிடப்பட்ட 13 பாடங்களின் அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்காக ரூபா 295,000,000 ஆன நிதியை ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதும் அதில் 91 சதவீதம் அல்லது ரூபா 270,000,000 தொகை ஆண்டின் இறுதி காலாண்டின் போது வழங்கப்பட்டிருந்த காரணமாக அச்செயற்பாட்டை 2023 ஆம் ஆண்டு வரை மேற்கொண்டு அப்பணத்தை செலவின | 2024 மார்ச் 31 இல் செயன் முன்னேற்றத்தை மாகாண கூட்டிணைப்பு உத்தியோகத்தர் களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு தற்போது நடவடிக்கை எடுத்து வருவதாக. | நிதி ஏற்பாடு வழங்குதல் எதிர்பார்க்கப்பட்ட இலக்கை நோக்கி முன் அனுபவம் ஒன்றின் பேரில் தயாரிக்கப்பட்ட முழு வேலை திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தி அதன் பிரகாரம் பௌதிக மற்றும் நிதி செயின் முன்னேற்றத்துடன் பயன்படுத்தும் சேர் முன்னேற்றம் ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டு செயலாற்றலை அடைந்து கொள்வதற்கு உரிய உத்தியோ அதிகாரிகள் கவனத்தில் கொள்ள வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய காலப்பகுதியை 2024 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது எனினும் 2024 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் நிதி பயன்படுத்தப்பட்ட முறை தொடர்பான செயன் முன்னேற்றம் கல்வி தர அபிவிருத்தி கிளைக்கு பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ix) | வருடாந்த ஒதுக்கீட்டு இணைப்பு குறிகாட்டி இலக்கிணை அடைந்து கொள்வதற்குரிய 2022 ஆம் ஆண்டின் செயல் முன்னேற்றம் தொடர்பாக ஆய்வு செய்ததன் பின்னர் 2023 ஆம் ஆண்டிற்காக 171 தேசிய பாடசாலைகள் மற்றும் 579 மாகாண பாடசாலைகளுக்கு ரூபா 209,027,000 தொகை மானியமாக வழங்கப்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த மானியங்களில் பயன்பாட்டுக் காலம் அவ்வப்போது நீடிக்கப்பட்டிருக்கையில் 2023 ஆம் ஆண்டிற்காக மானியமும் 2023 செப்டம்பர் 26 ஆம் திகதி வழங்கப்பட்டு இருந்தது. அத்தொகையைப் பயன்படுத்தும் காலஎல்லையும் அவ்வப்போது நீடிக்கப்பட்டு 2024 ஏப்ரல் 30 என இறுதியாக திருத்தம் செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை உரிய ஆண்டில் அடைந்து கொள்ள முடியாதிருந்தது. | நிதிப் பயன்பாடு திகதியை நீடிப்பதற்கு நேர்ந்துள்ளதை ஏற்றுக் கொள்வதாக | நிதி ஏற்பாடுகளை வழங்கும் போது எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்ளக் கூடிய வகையில் முன் அனுபவத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட முழு வேலை திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தி அதன் பிரகாரம் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றத்துடன் செயலாற்றலை அடைந்து கொள்வதற்கு உரிய உத்தியோகத்தர்கள் கவனம் செலுத்துதல் வேண்டும் |
| (x) | 07 ஒதுக்கீட்டு இணைப்பு குறிகாட்டிகளின் கீழ் கோட்ட கல்வி அலுவலங்களுக்கு 328 மடிக் கணினிகள் கொள்வனவு செயயதல், 09 மாகாணங்களில் NEMIS தரவு முறைமையை நிறுவுதல், கல்வித்துறையின் அனைத்து செயலாற்றல் | தகவல் முறைமை மூலம் தகவலை பெற்றுக் கொண்டு உரிய ஒதுக்கீட்டு இணைப்பு குறிகாட்டிகளை 2024 ஆம் ஆண்டில் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை | எதிர்பார்த்த இலக்குகளை உரிய காலப் பகுதியில் நிறைவேற்றுவதற்கு உரிய உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | அறிக்கை துறை அளவீடு (Sector Indicators) கல்வி அமைச்சின் உத்தியோக பூர்வ இணையதளத்தில் பிரசித்தப்படுத்தல் ஆகிய செயற்பாடுகள் 2025 ஆம் ஆண்டளவில் மேற் கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதன் இலக்கை அடைந்து கொள்வதற்காக 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கீட்டு குறிகாட்டி இலக்கம் 53, 55 மற்றும் 56 இனைச் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதற்காக 07 மில்லியன் அ.டொ ஒதுக்கப்பட்டு இருந்தது. எனினும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் இந்த இலக்கு அடையப்படாமையல் அந்த 07 மில்லியன் டொலர்களை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. | எடுத்துள்ளதாக | |
| (xi) | 328 மடிக் கணணிகளை கொள்வனவு செய்யும் பெறுகை 2023 ஜூலையில் ஆரம்பிக்கப்பட்டு 2023 திசெம்பர் 15 ஆம் திகதி தனியார் நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 79,548,000 பெறுமதிக்கு கேள்வி வழங்கப்பட்டிருந்தது. உரிய மடிக் கணினிகள் விதந்துரைகளுக்கு இணங்கியதா என உறுதிப்படுத்தாமல் 2024 மார்ச் 08 ஆம் திகதி கல்வி அமைச்சின் மத்திய களஞ்சியத்திற்கு கையேற்கப்பட்டிருந்தது. 328 மடிக் கணினிகளும் உரிய விதந்துரைகளுக்கு இணங்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. | விதந்துரைகளுக்கு இணங்கியதா என உறுதிப்படுத்தியதன் பின்னர் மாத்திரம் பொருட்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (xii) | மீளாய்வாண்டின் போது இந்த SESIP நிகழ்ச்சிச் திட்டத்தின் கீழ் பரீட்சை திணைக்களத்தில் செயற் படுத்தப்பட்டிருந்த 05 செயற் பாடுகளுக்காக மதிப்பீட்டு நிதி ஏற்பாடு ரூபா | ஒதுக்கீடு மற்றும் இனை குறிகாட்டிகளுக்கு உரிய செயற்பாடுகளை மாத்திரம் செயற்படுத்தி யதால் அடையக்கூடிய செயல் முன்னேற்றம் 6 சதவீதம் அளவில் | கொள்கை தீர்மானங்களுக்கு அண்மித்த வகையில் ஒதுக்க இணைப்பு குறிகாட்டிகளில் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றத்தை |

| | | | |
|---|---|---|---|
| | 97,000,000 இல் ரூபா 5,662,072 மாத்திரம் செலவிடப் பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் 2023 ஆம் ஆண்டின் போது அடையப்படாத இருந்த செயல் முன்னேற்றம் 94 சதவீதமாக இருந்தது. | இருந்ததை ஏற்றுக் கொள்வதாக | எதிர்பார்த்த மட்டத்தை அடைந்து கொள்வதற்கு அதிகாரிகள் கவனத்தில் கொள்ள வேண்டும். |
| (xiii) | 2023 ஆம் ஆண்டின் போது இரண்டாம் நிலை கல்வி பகுதிக்கு தேசிய கல்வி நிறுவனத்துடன் ரூபா 50,000,000 நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் விடயத்தில் தற்காலிகமாக இடை நிறுத்திய காரணத்தினால் மீளாய்வாண்டு எவ்வித ஒதுக்கீடு இணைப்பு கொள்கைகள் இலக்குகள் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக்கொள்வதாக | கொள்கை ரீதியான தீர்மானங்களுடன் ஒதுக்கீட்டு இணைப்பு குறிகாட்டிகளை விரைவில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | இரண்டாம் நிலை கல்விக்காக தகவல் தொழில்நுட்ப நிலையம் ஒன்றை நிறுவுதல் | | |
| | 2019 நவம்பர் 5 ஆம் திகதி கொரிய EXIM வங்கியுடன் நிதிப் பங்களிப்பிலிருந்து மூன்று தகவல் தொழில்நுட்ப நிலையங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 35,663,773 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் கடன் உடன்படிக்கையை செயற்படுத்துவதற்கு முடியாதிருந்தது. கடன் உடன்படிக்கை 2023 மே 10 ஆம் திகதி பூர்த்தி முடிவடைந்ததால் மேலும் 33 மாதங்களில் செயற்திட்ட காலத்தை நீடிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்த போதும் திருத்திய கடன் உடன்படிக்கை கைச்சாத்திடல் 2024 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கடன் மீளமைப்பு கலந்துரையாடல் காரணமாக இச்செயற்திட்டத்துக்குரிய கடன் உடன்படிக்கையை திருத்துதல் தாமதமானதாக கொரியா EXIM வங்கியால் அறிவித்து அனுப்பியுள்ளதாக | உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்து செயற் திட்டங்களின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு தேவையான நிலையங்களை நிறுவுதலைத் தீர்மானித்து செயற்திட்டத்தினை வெற்றிகரமாக முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | இந்தியா அரசின் மானியங்களின் கீழ் புசல்லாவ சரஸ்வதி மத்திய மகா வித்தியாலயத்தின் கட்டிடங்களை நிர்மானிக்கும் நடவடிக்கைகள் 2019 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டு இருந்தது | இணங்குகிறேன். உரிய பெறுகை நடவடிக்கைகள் எதிர்காலத்தில் கல்வி அமைச்சின் மூலம் மேற்கொள்வதாக அறிவிக்கப்பட்டுள்ளதாக | பாடசாலைகளில் பௌதீக அபிவிருத்தி மூலம் பிள்ளைகளுக்கு நலன்களை பெற்றுக்கொள்வதற்கு தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட |

இப்பாடசாலைக்காக கணனி உதிரிப் பாகங்கள் மற்றும் தளபாடங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 6,658,405 மில்லியன் நிதி ஏற்பாடுகளுக்குரிய பெறுகை நடவடிக்கைகள் கணக்காய்வு திகதியான 2023 மார்ச் 20 ஆம் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை. அதன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டின் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு 04 ஆண்டுகள் கடந்திருந்த போதும் இச்செயற் திட்டத்திற்குரிய உபகரணங்களைக் கொள்வனவை பூர்த்தி செய்வதற்கு முகாமைத்துவம் தவறி இருந்தது.

வேண்டும்.

(ஈ) தொழில்நுட்ப விடயங்களுக்கான தேசிய கல்வி கல்லூரி நிர்மாணம்

2013 ஆம் ஆண்டின் போது உயர்தர கல்வி விடயத்திற்கு தொழில்நுட்ப பாடத்தை அறிமுகப் படுத்துவதற்காக கல்வி அமைச்சினால் கொரிய அரசின் உதவிகளின் கீழ் தேசிய கல்வி விஞ்ஞான பீடம் ஒன்றை குளியாப்பட்டிய பிரதேசத்தில் நிர்மாணிப்பதற்காக கொரிய அரசாங்கத்திடமிருந்து 14.95 மில்லியன் அ.டொலர் உதவி மற்றும் உள்நாட்டு நிதியை பெற்றுக் கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. செயற் திட்டத்தை செயல்படுத்துதல் 2021 ஆம் ஆண்டு வரை தாமதித்த காரணத்தினால் திருத்திய செயற்பாட்டு பத்திரத்தின் பிரகாரம் கொரிய அரசுடன் இணைந்த சர்வதேச கொரிய ஒத்துழைப்பு முகவராண்மை (KOIKA) இந்த செயற் திட்டத்ததின் பொறுப்பினை அமைச்சுக்கு கையளித்து நிர்மாணத்திற்காக 08 லட்சம் அ.டொ தொகையில் 2021 ஆம் ஆண்டு திசெம்பர் பொதுத் திறைசேரிக்கு வழங்கி இருந்தது. 2016 ஆம் ஆண்டு முதல் இச்செயற் திட்டம் வெவ்வேறு காரணங்களின் பேரில் தாமதித்தமையால் இந்த ஒப்பந்தத்தை விரைவில்

2022 ஆம் ஆண்டில் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டதுடன் இதுவரை நிர்மாணங்களில் திரட்டிய பௌதீக முன்னேற்றம் 55 சதவீதம் அளவில் அடையப்பட்டுள்ளதாக

ஒப்பந்த நிர்வாகத்தின் மூலம் ஒப்பந்தங்களை முறையாக கண்காணித்து உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து உடன்படிக்கை பிரகாரம் வேலைகளை பூர்த்தி செய்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு கவனம் செலுத்துதல் வேண்டும்.

நிறைவேற்றுவதற்காக பொறியியல் செயல்பாடுகள் தொடர்பான மத்திய உசாத்துணை பணியகம் (CECB) இற்கு வழங்கப்பட்டிருந்த போதும் நிர்மாண நடவடிக்கைகள் 2022 திசெம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டதாக அவதானிக்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் 2024 ஜனவரி 31 இல் உள்ளவாறு நிர்மாண நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம் 47 சதவீதம் மாத்திரமாக இருந்தது.

(உ) பொலன்னருவை மாவட்டத்தின் பல்லின மற்றும் மும்மொழி கல்வியுடன் புதிய தேசிய பாடசாலை ஒன்றை நிறுவுதல்

இந்திய அரசு குடியரசின் உதவியின் கீழ் பொலன்னருவ மாவட்டத்தில் பல்லின மற்றும் மும்மொழி கல்வி உடன் புதிய தேசிய பாடசாலை ஒன்றை நிர்மாணிக்கும் I ஆம் கட்டத்திற்காக 2016 திசெம்பர் 07 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன் 2019 ஜனவரி 09 ஆம் திகதி பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. செயற்திட்ட காலத்தை விஞ்சி 11 மாதங்களின் பின்னர் இந்திய அரசு உடன்படிக்கையை இழத்துச் செய்திருந்ததுடன் 42 சதவீத நிர்மாண நடவடிக்கைகளுக்கு 03 கட்டங்களில் மதியுரை கட்டணங்களாக CECB நிறுவனத்திற்கு ரூபா 11,881,577 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமல் இடம்பெற்ற தாமதத்திற்கு அந்நிறுவனத்தினால் கோரப்பட்டுள்ள மொத்த மதிரையுறை கட்டணங்கள் ரூபா 6,367,091 ஆக இருந்தது. புதிய ஒப்பந்தத்தில் இருந்து நீங்கியமை காரணமாக மத்திய பொறியியல் சேவை தனியார் கம்பெனிக்கு ரூபா 200,664,128 இற்கு புதிய ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் முன்னைய விலை மற்றும் ஒப்பிடும் போது கிரையம் ரூபா 13,863,566 ஆல் அதிகரித்திருந்தது. 2023 ஆகஸ்ட்

விடய பரப்பு ஓரளவு குறைக்கப்பட்டு மதிப்பீடொன்று பெற்றுக்கொள்ளப்பட்டு கல்வி அமைச்சின் இணக்கப்பாட்டின் பேரில் இரண்டாவது ஒப்பந்தக்காரருக்கு ஒப்பந்தத்திற்கு மேலதிகமான (உடன்படிக்கை ஒன்றுடன்) 2024 ஏப்ரல் 29 ஆம் திகதி கைசச்சாத்திடப்பட்டு தற்போது அச்செயற்பாட்டை நிறைவேற்றுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் நாட்டில் காணப்பட்ட பாதுகாப்பற்ற நிலைமை பேரில் இந்நிலைமை உருவாகியுள்ளது. இந்திய தூதுவராகத்தினால் அச்செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் எஞ்சிய வேலைகளைப் பூர்த்தி செய்தற்காக அரசின் நிதி ஏற்பாடுகளை பெற்றுக் கொள்வதற்கு நேர்ந்துள்ளதாக

உடன்படிக்கை பிரகாரம் வேலைகளை பூர்த்தி செய்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும

31 ஆந் திகதி இந்திய தூதரத்தினால் இதன் விடயப் பரப்பு குறைக்கப்பட்ட காரணத்தினால் கட்டிடம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங் களுக்காக பயன்படுத்துவதற்கு முடியாமல் ஆபத்தொன்றுடன் காணப்பட்டது.

**3.11 உள்நாட்டு நிதியங்களிலிருந்து செயற்படுத்தி செயற்திட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சினால் ஊவா மாகாண கல்வி திணைக்களத்திற்கு ‘‘லமா மிதுரு’’ நிகழ்ச்சித்திட்டத்திற்காக வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளில் ரூபா 3,223,210 தொகை சேமிக்கப்பட்டிருந்த்துடன் அத்தொகை திசெம்பர் 31 இல் திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்படாமல் கேள்வி வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டுருந்தது. | 2021 ஆம் ஆண்டிற்குறிய இதுவரை இரண்டு ஆண்டுகளை கடந்த வைப்புகளை திறைசேரிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | ஒவ்வொரு ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்படும் காசு மீதிகளை சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் திறைசேரிக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக |

**3.12 பெறுகைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 1,804,834 கிரயமான தரமற்ற 144 ஆய்வுகூட இருப்புக்களை 83 பாடசாலைகளுக்கு வழங்கியமையால் எதிர்பார்த்த பிரகாரம் உரிய விளைவுகள் கிடைத்திருக்கவில்லை மேலும் தற்போதைய பாட பரிந்துரைகளில் இருந்து அகற்றப்பட்ட இரசாயன பொருட்கள் பாடசாலைகளுக்கு வழங்குவதற்காக ரூபா 767,543 தொகை 2021 ஆம் ஆண்டின் போது செலவிடப் பட்டிருந்தது. | சில சில பாடசாலைகளில் பதவியணியினர் அந்த இரசாயன பொருட்களை சரியான வகையில் பயன்படுத்துவது இல்லை எனவும் அவதானிக்கப்பட்டன. மற்றும் பாடசாலை களால் மேற்கொள்ளப் பட்ட வேண்டுகோள் களில் உள்ளடக்கப்பட்ட இரசாயன பொருட்கள் வழங்கப்பட்டிருக்க வில்லை என்பதாக | தேவைப்பாடு பொருத்தமான தன்மை அடிப்படையில் பொருட்களை கொள்வனவு செய்தல் இடம்பெற வேண்டும் |
| (ஆ) | பாடசாலைகளில் காலாவதியான அகற்றப்பட வேண்டிய லேபல் இல்லாத இரசாயன பொருட்கள் மற்றும் கதிர் பொருட்கள் நீண்ட காலம் இருந்து வருவதுடன் அந்த இரசாயன பொருட்கள் நீண்ட காலமாக காணப்படுவதுடன் அந்த | இரசாயன பொருட்களை அகற்றுவது முறையான சட்ட ரீதியான வேலைத்திட்டமொன்றின் மூலம் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மத்திய சுற்றாடல் | சட்டரீதியான முறையான வேலைத்திட்டமொன்று தயாரித்து கைதவிர்க்கும் செயற்பாடுகள் விரைவில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இரசாயன பொருட்களை சுற்றாடலில் விடுவதற்காக முறையான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்படாமையால் பாடசாலை சமூகம் பாதுகாப்பற் நிலைமைக்குட்பட்டிருந்தது. இது தொடர்பாக பாடசாலைகளால் வலயக்கல்வி அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன்.<br>மொறட்டுவ வேல்ஸ் குமார வித்தியாலயத்தின் மூலம் தனியார் நிறுவனமொன்றின் ஊடாக இரசாயன பொருட்களை அகற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் அதற்காக அதிக செலவினம் ஏற்படும் என்ற காரணத்தினால் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது.. பாடசாலைகளில் காணப்படும் இவ்வாறான பழைய இரசாயன பொருட்கள் மற்றும் அப்பொருட்களின் கைதவிர்ப்பு செயற்பாட்டிற்கான முறையான வேலைத்திட்டமொன்று தயாரிக்காமை தொடர்பில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டத்தின் 7 ஆவது தொடரின் போது மாத்திரம் அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்த்துடன் கலந்துரையாடப்பட்டிருந்த போதும் சிக்கலை தீர்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 2023 செப்தம்பர் 06 ஆம் திகதி நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்ட நிகழ்ச்சி நிரலிலிருந்து நீக்கப்பட்டிருந்து. | சுகாதார சபையுடன் கலநடதுரையாடி வரப்படுகிறது.தற்போது அமைச்சரவை அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்துள்ளதாக வாய்மொழி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக | |
| (இ) | 2023 ஆம் ஆண்டிற்காக சீருடை தேவைப்பாடு சரியாக இனங்காணப்படாமை காரணமாக தெரிவுக் கணக்காய்வு பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட வலக கல்வி அலுவலகம், பாடசாலைகளில் மற்றம் பன்னலகெதர களஞ்சியத்தில் 1,185, 614 சீருடை பெக்கட் மிகையாக காணப்பட்டன. | இணங்குகின்றேன். தேவையை விட கூடுதலாக சீன அரசிடமிருந்து கிடைத்த துணிகளின் அளவு மிகையாக இருந்தமை காரணமாக இருந்ததாக | மாணவர் தொடர்பான முறையான தரவு மதிப்பீடொன்று நாளதுவரையாக பேணிச்செல்வதன் மூலம் தேவைப்பாடு சரியாக இனங்கண்டு கொள்வனவு மேற்கெள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | மாத்தறை ராகுல வித்யாலயத்தில் நடைபெற்ற ரகல் நூற்றாண்டு வித்யாஹிமானி கல்வி கண்காட்சி மற்றும் களியாட்டத்திற்கு பழைய மாணவர் சங்கத்தினால் பெறுகை நடைமுறைக்கு புறம்பாக அசாதாரண விலை விபரங்களின் கீழ் வெவ்வேறு பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக் கொள்வதற்கு மொத்தம் ரூபா 3,185,111 தொகை செலவிடப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்பட்டு இருக்கவில்லை என்பதாக | தேசிய பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.13 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2017 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட முன்மொழிவு 92 இன் பிரகாரம் செயற்படுத்தப்பட்ட உயர்தர மாணவர்கள் மற்றும் அவற்றில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு டப் கணினி வழங்கும் திட்டத்தின் கீழ் 96,919 டப் கணினிகள் மற்றும் 2639 இராக்கைகளை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்த போதும், தரம் 6 தொடக்கம் 11 வரையான மாணவர்களுக்கு இக் கணினிகளை வழங்குவதென அத் தீர்மானம் மாற்றியமைக்கப் பட்டிருந்தது. இவற்றின் பெறுமதி ரூபா 589,035,758 ஆகவிருந்த 18,973 டப் கணினிகள் மற்றும் பெறுமதி ரூபா. 88,275,000 ஆகவிருந்த 535 இராக்கைகள் மேல் மாகாணத்தின் 256 பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டிருந்த போதும் அவற்றில் அதிகமானவை குறை பயன்பாட்டுடன் அல்லது பயன்பாடற்றுக் காணப்பட்டன. | கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்கு தொழில்நுட்பத்தினை இணைப்பதை எந்தவொரு பாடத்திற்கும் பல முறைகளில் பயன்படுத்தலாம். இது தொடர்பாக ஆசிரியர்களை மேலும் அறிவூட்டுவதாக | டப் கணினிகளைப் பயன்படுத்தி அதன் பயனை மாணவர்கள் பெறச் செய்யும் வகையில் தேவையான அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) அரச உதவி பெறும் பாடசாலைகள் மற்றும் பயிற்சிக் கல்லூரிகள் சட்டத்தின் பிரகாரம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பாடசாலைகள் மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் தொடர்பில் அவற்றின் பெயர், அமைவிடம், கட்டடங்களின் எண்ணிக்கை, காணியின் அளவு, மற்றும் விசேடமாக யாரிடமிருந்து கைப்பற்றப்பட்டது ஆகிய விபரங்கள் தொடர்பாக கல்வி அமைச்சில் அல்லது மாகாணத் திணைக்களங்களில் தரவுகள் பேணப்பட்டு வரவில்லை. | கோப் குழுவின் பரிந்துரையின் பேரில் பூரணமான ஒரு தரவுத் தளத்தினை உருவாக்குவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் தற்பொழுது பூரணப்படுத்தப்பட்டுள்ளன. | அமைச்சின் மூலம் பிழையற்ற மற்றும் நாளதுவரையாக்கம் செய்யப்பட்ட தரவுத் தளமொன்று பேணி வரப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அரச உதவி பெறும் பாடசாலைகள் மற்றும் பயிற்சிக் கல்லூரிகள் சட்டம் தொடர்பான வர்த்தமானி பிரசுரத்தின் பிரகாரம் மேல் மாகாணத்திற்குச் சொந்தமான பாடசாலைகள் 782 ஆகக் காணப்பட்டன. மேல் மாகாணக் கல்வி அமைச்சின் சட்டப் பிரிவின் மூலம் அரச உதவி பெறும் பாடசாலைகள் மற்றும் பயிற்சிக் கல்லூரிகள் (மேலதிக ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் அரசினால் கையேற்கப்பட்ட மேல் மாகாணத்தில் தற்பொழுது இயங்கி வரும் பாடசாலைகள் தொடர்பில் 2014 ஜனவரி 31ஆம் திகதியன்று ஒரு பட்டியல் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அதில் உள்ளடங்கியிருந்த பாடசாலைகளின் எண்ணிக்கை 489 ஆகும். இதனடிப்படையில் 293 பாடசாலைகள் தொடர்பிலான வித்தியாசம் அவதானிக்கப்பட்ட துடன் இதில் 9 பாடசாலைகள் முன்னைய உரிமையாளர்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளதுடன் தொடர்ந்தும் 284 பாடசாலைகள் தொடர்பான தகவல்கள் அமைச்சிடம் காணப்படவில்லை. | நாடு முழுவதும் விடுவிக்கப்பட்டுள்ள அனைத்து அரச உதவி பெறும் பாடசாலைகள் தொடர்பான தகவல்களை மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிதத்துக கொள்வதாக. | அமைச்சின் சொத்து முகாமைத்துவத்தினை முறையாகப் பேணுவதற்கு தேவையான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றினை ஏற்பாடு செய்து சரியான தகவல்களை பேணி வருவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | கல்வி அமைச்சின் செயலாளரின் பெயரில் பதிவு செய்யப்பட்ட 140 மோட்டார் வாகனங்கள் அமைச்சின் கைவசம் காணப்படவில்லை. | காணாமல் போயுள்ள 141 வாகனங்கள் தொடர்பான தகவல்களை இதுவரை உறுதியாக இனங்கண்டுகொள்ள முடியாது போயுள்ளமையினால் இதுவரை இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதாக | அமைச்சின் செயலாளரின் பெயரில் பதிவு செய்யப்பட்ட வாகனங்களை சரியாக இணங்கண்டு அடுத்த நடவடிக்கைகளை எடுப்பதுடன் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றினை ஏற்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2022 நவம்பர் 30 ஆம் திகதிய ED/08/26/05/3/01Mkஆம் இலக்க கல்வி அமைச்சின் செயலாளரின் கடிதத்தின் 13 ஆம் பிரிவின் பிரகாரம் டப் கணினிகளை எக் காரணம் கொண்டும் பாடசாலைக்கு வெளியில் எடுத்துச் செல்வது கூடாதெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதும் கணக்காய்வாளரினால் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் பொது 10 | தரப்பட்ட அறிவுறுத்தல் களுக்கு அமைவாக செயற்படுமாறு பாடசாலைகள் மற்றும் மாகாண மற்றும் வலய தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக | கல்வி அமைச்சின் செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் செயற்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பாடசாலைகளின் 39 டப் கணினிகள் பாடசாலைக்கு வெளியில் எடுத்துச் செல்லப்பட்டிருந்தன. | | |
| (ஊ) | திறன்கள் பிரிவில் ரூபா. 8,800,000 கூட்டுக் கிரயமான இரண்டு வாகனங்கள் 2019 ஒக்டோபர் 10 ஆம் திகதி முதல் மற்றும் 2022 மார்ச் 14 ஆம் திகதி முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை பயன்பாடற்றுக் காணப்பட்டன. | வாகனங்களை திருத்தம் செய்வதற்காக ஏற்கனவே விலைமனு கோரப்பட்டுள்ளதுடன் அதற்காக அதிக தொகைப் பணம் செலவிடப்பட வேண்டியுள்ளதால் இப் பிரிவின் கீழ் இயங்கி வருகின்ற வேறு நிறுவனங்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக | சொத்துக்கள் முறையாக முகாமை செய்யப்பட்டு பயன்படுத்தப்படல் வேண்டும். |

**3.14 நட்டங்கள் மற்றும் இழப்புக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுகளில் புத்தகங்களிலிருந்து பதிவழித்தல் தொடர்பான கூற்றின் ஆரம்ப மீதியாக 8 சேதங்களுக்குரிய ரூபா 16,552,184 ஆன பெறுமதியுடைய நட்டங்களை அறவிடுவதற்கு அல்லது புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு மீளாய்வாண்டில் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 2024 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையில் அம்மீதி ரூபா 16,527,317 வரை குறைவடைந்து இருந்தது. | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாண ஏற்பாடுகளின் பிரகாரம் பரிசோதனை மேற்கொண்டு நட்டங்களை அறவிடுவதற்கு அல்லது புத்தகங்களில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | நீர் கொழும்பு ஹரிச்சந்திர வித்யாலயத்தில் பாடசாலை அபிவிருத்தி சங்கத்திற்கு கிடைத்த பணத்திலிருந்து ரூபா 1,384,225 தொகை அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் உத்தியோகத்தர் ஒருவரால் வங்கியில் இடப்படாமல் முறையற்ற விதத்தில் பயன்படுத்தி 05 ஆண்டுகளுக்கு அண்மித்த காலமாக கடந்திருந்த போதும் அப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாணங்கள் மற்றும் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து உத்தியோகத்தர் தொடர்பாக தேவையான எதிர்வரும் நடவடிக்கை களை எடுப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) கொட்டஹேன மத்திய மகா வித்தியாலயத்தின் மஹிந்தோதய தொழில்நுட்ப பீடத்தில் ஏற்பட்ட திடீர் தீ காரணமாக ரூபா 12,517,406 ஆன மதிப்பிடப்பட்ட நட்டத்திற்காக உரிய வளவிற்கு கணனி உதிரி பாகங்கள் வழங்கிய மற்றும் உள்ளக மின்சார இணைப்பை தாபித்த வழங்குனர் இதற்கு பொறுப்பு கூற வேண்டுமென பரிந்துஜரக்கப்பட்டிருந்த போதும் இந்நட்டம் மற்றும் 28.75 சதவீத திணைக்கள கட்டணத்துடன் ரூபா 16,116,160 ஆன மொத்த நட்டத்தையும் வழங்குனர் நிறுவனத்திடமிருந்து அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் அளிக்கப் பட்டிருக்கவில்லை. | முழு நட்டத்தையும் வழங்குனர் நிறுவனத்திடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.15 சிக்கனமற்ற கொடுனக்கல் வாங்கலகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உயர்கல்வி பிரிவினால் அரச பல்கலைக்கழகங்களுக்காக Cloud அடிப்படையிலான முகாமைத்துவ தகவல் முறைமை ஒன்றை பெற்றுக் கொள்வதற்காக Rollout செலவினமாக 17 பல்கலைக்கழகங்களுக்காக ரூபா 3.9 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2018 ஜுலை மாதம் வரையில் தரவுகள் பேணிச் செல்வதற்காக ரூபா 110 மில்லியனுக்கான பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இம்முறைமைக்காக மாணவர் எண்ணிக்கை அதிகரிக்கும் போது அதற்காக செலுத்த வேண்டிய பணம் அதிகரிப்பதால் அத்தொகையை கொடுப்பனவு செய்வதற்குள்ள இயலுமை தொடர்பாக கருத்திற் கொள்ளாமல் உடன்படிக்கை செய்த காரணத்தினால் செயற்திட்டத்தை கைவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட இருந்ததுடன் குறித்த சேவை நிறுவனத்தினால் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருந்தன. | முறைமைக்காக உள்ளீர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை அடிப்படையில் கொடுப்பனவு அதிகரிப்பதால் அதிகரிப்பது சரியானதாகும் இந்த முறைமை Cloud அடிப்படையாக தரவுமுறையொன்றாக இருப்பதால் இம்முறைமைக்காக உள்ளடக்கக்கூடிய மாணவர்கள் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்படவில்லை அதன் பிரகாரம் முறைமைக்காக உள்ளடக்கக் கூடிய மாணவர் எண்ணிக்கை தொடர்பாக ஆரம்ப ஆய்வொன்று மேற்கொள்வதற்கு தேவைப்படாததுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வருடாந்த செய்யப்பட்டு இருந்தது எதிர்பார்த்த மாணவர்கள் எண்ணிக்கை தொடர்பாக 2013 ஒக்டோபர் 1 ஆம் திகதி தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு அறிக்கையின் 3 ஆம் இலக்க பரிந்துரை தொடர்பாக கவனம் செலுத்தியுள்ளதாக | வெளி நிறுவனம் ஒன்றுடன் உடன்படிக்கை மேற்கொள்வதற்கு முன்னர் உரிய கொடுக்கல் வாங்கல்களை மற்றும் முறைமை தொடர்பாக முறையான ஆய்வொன்றை மேற்கொண்டு தேவைப்பாடுகள் மற்றும் இயலளவு முறைப்படி இனங்காணப்பட்டு எதிர்வரும் நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும். |

### 3.16 கணக்காய்வு விசாரணைகளுக்காக பதில் அளிக்காமை

மீளாய்வாண்டில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்க்கு வழங்கப்பட்ட 17 கணக்காய்வு விசாரணைகளுக்காக 1 மாதம் முதல் 6 மாதங்கள் வரையான காலம் கடந்திருந்த போதும் பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை

### 3.17 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | புலஸ்திபுர தேசிய கல்வியியற் கல்லூரியின் 29 அரச விடுதிகளுக்கான 2018ஆம் ஆண்டு மதிப்பிடப்பட்ட நிதிப் பெறுமான வாடகையினை அனுமதிக்காமை காரணமாக 2018 ஜனவரி முதல் 2022 திசம்பர் வரை ரூபா. 1,446,000 வாடகையினை அரசு இழந்திருந்தது.. | பதில் சமர்ப்பிக்கப்பட வில்லை. | அரசுக்குச் சொந்தமான வருமானங்களை முறையாக அறவிடுவதற்கு குறித்த அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2008 செப்தம்பர் 19 ஆம் திகதிய 2008/37 இலக்க சுற்றறிக்கைக்கு முரனாக தரம் 6 இற்கான புதிய வகுப்பொன்று ஆரம்பிக்கப்படாது இடைப்பட்ட வேறு தரங்களுக்கான புதிய வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது இனங்காணப்பட்டமை காரணமாக புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கு இப் பாடசாலைகளுக்கு அனுமதி பெறும் சந்தர்ப்பம் இல்லாமல் போயிருந்து. மேலும் வகுப்புகளுக்கான வெற்றிடங்கள் காணப்பட்டமை காரணமாக முறையற்ற விதத்தில் மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான சந்தர்ப்பம் அதிபர்களுக்கு கிடைத்திருந்ததுடன் இதற்காக பாடசாலை திட்டமிடல் விதந்துரைப்பு வழிகாட்டிக்கு அமைவாக திட்டமிடல் குழுவின் அனுமதியும் பெறப்பட்டிருக்கவில்லை. | பதிலை பின்னர் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதாக | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செயற்படல் வேண்டும். |
| (இ) | தரம் 06 இற்கு புலமைப்பரிசில் அடிப்படையில் மாணவர்களை உள்வாங்கியதன் பின்னர் தரம் 07 இற்கு அதிகளவான புதிய மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நடைமுறை சில பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்டிருந்த அதேவேளை இச் செயன்முறையானது புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை இப் பாடசாலைகளில் சேர்ப்பதற்குத் தடையாக இருந்தது. இதனடிப்படையில் தரம் 07 இற்கான புதிய மாணவர் அனுமதி 2016 தொடக்கம் 2022 | பதிலை பின்னர் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதாக | பாடசாலைகளில் தரம் 06 வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கான தேவையை இனங் காண்பதற்கான முறையான திட்டமொன்றினை ஏற்படுத்தி அத் தகவல்களை நாளதுவரையாக்கம் செய்து பராமரித்து |

| | | | |
|---|---|---|---|
| | வரை முறையே 470, 503, 718, 829, 382, 707 மற்றும் 889 ஆகக் காணப்பட்டது. | | வருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். மேலும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைவாக புதிய வகுப்பினை ஆரம்பித்து தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு உரித்தான சகல சந்தர்ப்பங்களையும் வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2021 மே 28 ஆம் திகதிய 13/2021 சுற்றறிக்கை மற்றும் 2022 ஜனவரி 02 ஆம் திகதிய 22/1960/607/079 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் ஆண்டு 1 முதல் ஆண்டு 5 வரையிலான வகுப்புகளின் மாணவர் எண்ணிக்கை 40 எனவும் ஆண்டு 6 முதல் ஆண்டு 11 வரையான வகுப்புகளுக்கு மாணவர் எண்ணிக்கை 45 எனக் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் இதனடிப்படையில் ஒரு வகுப்பிற்கு புலமைப்பரிசில் மூலம் மேலும் 5 மாணவர்களை உள்வாங்க முடியுமாக இருந்த போதும் தரம் 5 ஆகும் பொழுது 40 இற்கும் அதிகமான மாணவர்கள் வகுப்புகளுக்கு உள்வாங்கப்பட்டிருந்தனர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 70 பாடசாலைகளில் 25 பாடசாலைகளில் 548 மாணவர்கள் இவ்வெல்லையைத் தாண்டி உள்வாங்கப்பட்டிருந்ததன் காரணமாக தரம் 06 ஆகும் பொழுது வகுப்புகளில் வெற்றிடம் காணப்படாததால் அவ் வகுப்புகளுக்கு புலமைப்பரிசில் பரீட்சையின் மூலம் மாணவர்களை உள்வாங்குவதற்கு முடியாமல் இருந்தது. | பதில் சமர்ப்பிக்கவில்லை | பாடசாலைகளில் தரம் 06 வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கான தேவையை இனங் காண்பதற்கான முறையான திட்டமொன்றினை ஏற்படுத்தி அத் தகவல்களை நாளதுவரையாக்கம் செய்து பராமரித்து வருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். மேலும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைவாக புதிய வகுப்பினை ஆரம்பித்து தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு உரித்தான சகல சந்தர்ப்பங்களையும் வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2023 திசம்பர் 31 ஆம் திகதி இடமாற்றம் பெற்றுச் சென்ற, மரணமடைந்த, ஓய்வு பெற்ற, சேவையிலிருந்து நீக்கப்பட்ட மற்றும் சேவையிலிருந்து இடைவிலகிய ஊழியர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த மொத்தக் கடன் தொகை ரூபா 170,296,262 ஆக இருந்ததுடன் 2024 ஏப்ரல் 30 ஆம் திகதி வரை ரூபா 164,077,248 அறவிடப்பட வேண்டியிருந்தது. இதில் ரூபா. 16,592,173 தொகை 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும் ரூபா. 30,899,811 தொகை 10 வருடங்களுக்கும் 20 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் தொடக்கமும் ரூபா. 22,264,959 தொகை 05 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் தொடக்கமும் ரூபா. 94,320,305 தொகை 05 ஆண்டுகளுக்கும் குறைந்த காலம் நிலுவையாகக் காணப்பட்டது. | கடன் நிலுவைகள் மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட கடன் நிலுவைகளை விரைவில் தீர்ப்பதற்காக சகல மாகாண கல்வித் திணைக்களங்கள், வலயக் கல்விக் காரியாலயங்கள், தேசிய கல்வியியற் கல்லூரிகள் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய அமைப்புகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது டன் குறித்த நிதிப் பிரிவுகள் ஏற்கனவே அந் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக. | கடன் நிலுவைகளை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 2023 திசம்பர் 31 ஆம் திகதியன்று இடமாற்றம் பெற்ற ஊழியர்களிடமிருந்து மேலதிகக் கொடுப்பனவாக அறவிடப்பட வேண்டியுள்ள கடன் நிலுவை ரூபா. 41,563,841 ஆக இருந்ததுடன் 2024 ஏப்ரல் 30 ஆந் திகதி இதில் ரூபா. 39,950,191 அறவிடப்பட வேண்டியிருந்தது. இதில் ரூபா. 9,597,722 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் தொடக்கமும் ரூபா. 9,144,756 10 வருடங்களுக்கும் 20 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் தொடக்கமும் ரூபா. 4,903,471 05 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் தொடக்கமும் ரூபா. 16,304,242 05 வருடங்களுக்கும் குறைந்த காலம் தொடக்கமும் நிலுவையாகக் காணப்பட்டது. | கடன் நிலுவைகளைள் விரைவில் தீர்ப்பதற்காக சகல மாகாண கல்வித் திணைக்களங்கள், வலயக் கல்விக் அலுவலகங்கள், தேசிய கல்வியியற் கல்லூரிகள் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய அமைப்புகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது டன் குறித்த நிதிப் பிரிவுகள் ஏற்கனவே அந் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் அடிப்படையில் செயற்பட்டு நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ளல் வேண்டும். |
| (எ) | கல்வி அமைச்சின் வளாகத்தினுள் 25 முதல் 320 பேர் அமரக்கூடிய அமைப்பிலான 06 கேட்போர் கூடங்கள் மற்றும் கூட்ட மண்டபங்கள் காணப்படுகின்ற நிலையில் கல்வி அமைச்சினால் நடாத்தப்படுகின்ற கருத்தரங்குகளில் அதிகமானவை வெளி நிறுவனங்களின் கருத்தரங்கு மண்டபங்களில் நடாத்தப்பட்டு அதற்காக ரூபா. 10,587,237 செலவிடப்பட்டிருந்தது. | பதில் அளிக்கப்பட வில்லை. | அரசுக்குச் சொந்தமான வளங்களை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு மற்றம் பொருளாதார ரீதியிலான பயன் கிடைக்கும் வகையில் தீர்மாணங்களை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | பிரபலமான பாடசாலைகளுக்கு தரம் 01 இற்கு மாணவர்களை உள்வாங்கும் பொழுது பாடசாலைக்கு அண்மித்து வசிப்பவர்களுக்கான 50 புள்ளிகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக பாடசாலைக்கு அண்மித்த முகவரியொன்றில் வாடகைக்கான ஒப்பந்தம் மேற்கொள்ளப் படுகின்றமையால் நீண்ட காலமாக அப் பிரதேசத்தில் நிரந்தர வசித்து வரும் பிள்ளைகளுக்கு அப் பாடசாலைகளுக்கு உட்பிரவேசிக்கும் சந்தர்ப்பம் கிடைக்காமல் போகின்றது. | பதில் அளிக்கப்படவில்லை. | பிழையற்ற தன்மை மற்றும் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்துவதில் உள்ள சிக்கலான நிலையைக் கருத்தில் கொண்டு தர்க்கரீதியான அளவுகோல்களின் அடிப்படையில் சுற்றறிக்கை ஏற்பாடுகள் அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஐ) | கொழும்பு டீ.எஸ்.சேனானாயக்க கல்லூரிக்கு தரம் ஒன்றிற்கு மாணவர்களை உள்வாங்கும் சந்தர்ப்பத்தில் அண்மித்து வசிப்போர் என்பதை உறுதி செய்வதற்காக மாணவர்களது விண்ணப்பப்படிவத்துடன் போலியான ஆவணங்களை சமர்ப்பித்தல் தொடர்பில் கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் (தாபனம்) மற்றும் 5 அங்கத்தவர்கள் அடங்கிய குழு மூலமாக ஒரு விசாரனை மேற்கொள்ளப்பட்டது. அவ் விசாரனையுடன் தொடர்பான 2024 மார்ச் 22 ஆம் திகதிய ED/05/91/30/08-2024 இலக்க இடைக்கால அறிக்கையின் பிரகாரம் அண்மித்து வசிப்போரின் பிள்ளைகள் எனும் பிரிவின் கீழ் பாடசாலைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 57 விண்ணப்பதாரர்களில் 47 பேர் போலி ஆவணங்களை சமர்ப்பித்திருந்ததுடன் அதில் போலி கிராம அலுவலர் சான்றிதழ்களை சமர்ப்பித்தோர் 43 பேர் அடங்குவதாக குறித்த கிராம அலுவலர்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. | பதில் அளிக்கப்படவில்லை. | புலனாய்வு நடவடிக்கைகள் விரைவாக நிறைவு செய்யப்பட்டு தேவையான ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஒ) | திறன்கள் பிரிவின் பிரதான ஒரு நோக்கமாகிய தொழில்சார் உத்தியோகத் துறைக்குள் பிரவேசித்தல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டில் ஒரு திணைக்களம் மற்றும் 20 அரச சார்பான நிறுவனங்கள் மூலம் தொழிற் பயிற்சியினை நிறைவு செய்த பயிற்சியாளர்களை தொழிலுக்கு அமர்த்துதல் தொடர்பான பின்னூட்டல் செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படாததுடன் பயிற்சியாளர்களை தொழிலுக்கு அமர்த்துதல் தொடர்பான தரவுத் தளமொன்றும் காணப்படவில்லை. இதனால், 2023 ஆம் ஆண்டுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடாகிய ரூபா. 11,963,000,000 ஆகிய தொகையில் ரூபா. 9,737,862,020 செலவிடப்பட்டு நாட்டுக்காக பெற்றுக்கொடுக்கப்பட்ட தொழில்சார் பயிற்சி பெற்ற தொழிலாளர் படையினரின் எண்ணிக்கை எவ்வளவு என்பதும் மற்றும் அரசினால் மேற்கொள்ளப்பட்ட | தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அந் நிறுவனங்களின் மூலம் பயிற்சி நெறிகளை மேற்கொண்டு வெளியேறுகின்ற பயிற்சியாளர்களின் தொழிற் பிரவேசம் தொடர்பான தகவல்களை திரட்டுதல்/பின்னூட்டல் செய்வதற்கான பிரதேச மட்டத்தில் பின்னூட்டல் பத்திரமொன்றை/ | பகுப்பாய்வு ரீதியிலான தரவுத் தளமொன்றினை பராமரித்து வருவதன் மூலம் செலவிடப்பட்ட தொகைக்கு நிகரான பிரதிபலன் கிடைக்கப்பெற்றுள்ளதா என்பது தொடர்பான கணிப்பீடு மேற்கொள்ளப்படல் வேண்டும். அதனை எதிர்கால திட்டமிடல்களின் போது பயன்படுத்திக்கொள்வதற்கு அதிகாரிகள் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | செலவினத்திற்கு நிகரான தரக்கணிப்பினை பெற்றுக்கொள்ள முடிந்தமையினை மதிப்பீடு செய்ய முடியாதிருந்தது. | தகவல் திரட்டல் படிவமொன்றை அறிமுகப்படுத்தல், ஆய்வுகளை மேற் கொள்ளல் ஆகிய படிமுறைகள் மேற் கொள்ளப்பட்டுள்ள தாக. | எடுத்தல் வேண்டும். |
| (ஓ) | இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்காக தொழில் மற்றும் சேவைத் துறைகளில் தேர்ச்சி மிக்க தொழிற் படையினரை இணைக்கும் பொறுப்பினை நிறைவேற்றும் வகையில் நாடு முழுவதும் உள்ள 474 பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகங்களுக்காக திறன் விருத்தி உதவி உத்தியோகத்தர்கள் முறையே 317 பேர் மற்றும் 58 பேர் இணைப்புச் செய்யப்பட்டிருந்தனர். எனினும் 2023 ஆம் ஆண்டுக்கான செயலாற்றலை மதிப்பிடுகையில் அவ்வுத்தியோகத்தர்களுக்கு பொறுப்பளிக்கப்பட்டிருந்த 22 பிரதான பொறுப்புகக்களில் 18 பொறுப்புகளுடன் தொடர்பான வருடத்துக்கான முன்னேற்றம் 0 முதல் 35 வீதம் வரையிலான குறைந்த மட்டத்தையே காண்பித்தது. | இந் நிலைமையினை தவிர்த்துக் கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்கள் கள உத்தியோ கத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில் இவ்வதிகாரிகள் அடையப்பெற்ற முன்னேற்றத்தினை காலாண்டு அடிப்படையில் மேற்பார்வை செய்வதற்கும் அவர்களுக்குத் தேவையான இலக்குகளை பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக. | திறமைகளுடன் கூடிய ஒரு இளம் சமூகத்தை உருவாக்கும் பிரதான நோக்கங்கள் நிறைவேறும் வகையில் முறையான மேற்பார்வை மற்றும் பின்னூட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு திறன் விருத்தி உதவி உத்தியோகத்தர்களி ன் பங்களிப்பினை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**4. மனித வள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட மட்டத்தில் 1,623 உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் காரணமாக அமைச்சு நடவடிக்கைகளில் சிக்கல்கள் தோன்றியுள்ளன. 2023 ஆம் ஆண்டின் போது அமைச்சின் கீழ் உள்ள கல்விப் பிரிவு, நிபுணத்துவ திறன் அபிவிருத்தி மற்றும் தொழில் கல்வி, கோள் மண்டலம் மற்றும் விதாதா நிகழ்ச்சிகளுக்காக ஈடுபடுத்தப்பட்ட உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட சம்பளங்களுக்காக ரூபா 710,054,051 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் அந்த பதவியணி தொடர்பாக தரவுகள் மேற்படி எண்ணிக்கைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. அமைச்சின் கீழ் தேசிய பாடசலைகளின் அதிபர்கள் | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை | அமைச்சின் அனைத்து பதவியணி தகவல்கள் உள்ளடக்கப்படும் வகையில் மனித வளங்கள் தொடர்பான தரவு முறையொன்று தாபிக்கப்பட்டு நாளதுவரையாக பேணிச்சென்று மனித வளங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | ஆசிரியர்கள் ஏனைய கல்வித்துறை மற்றும் பிரவென பிரிவுகளின் பதவியணியினரும் உள்ளடக்கப் படாதிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த தகவல்கள் அமைச்சிடம் காணப்படவில்லை. | | முகாமை செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2017 செப்தம்பர் 20 ஆந் திகதிய 4/2017 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை பிரகாரம் நிறுவனத்தின் உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்தல், இராஜினாமா செய்தல், வேலையை விட்டுச் செல்லல், சேவையிலிருந்து நீக்குதல், ஓய்வு பெறச் செய்தல் மற்றும் மரணித்தல் போன்ற விடயங்கள் காரணமாக பதவியணியில் இடம் பெறும் மாற்றங்களின் பிரகாரம் நாளதுவரையறுக்கப்பட்ட பதவியணியினர் தகவல்களை ஒவ்வொரு காலாண்டு முடிவடைந்து ஒரு மாதத்திற்குள் முகாமைத்துவ சேவைகள் தினைக்களத்திற்கு அனுப்பி வைக்க வேண்டிய போதிலும் அமைச்சினால் 2023 ஆம் ஆண்டிற்குரிய அறிக்கை, அரையாண்டு அறிக்கை 2024 ஆம் ஆண்டின் சனவரி மற்றும் மாதங்களில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் அறிவிப்பின் போது அமைச்சு, தேசிய பாடசாலைகள், கல்வி பதவியணியினர், உயர் கல்வி பதவியணியினர் மற்றும் பிரிவெனா பிரிவின் பதவியணியினர் தொடர்பான தகவல்கள் முகாமைத்துவ சேவைகள் தினைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படவில்லை. | பதில் சமர்ப்பிக்கப்பட வில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்து மனிதவள முகாமைத்துவத் தை முறைப்படுத்தி பேணிச் செல்ல வேண்டும். |